ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# புண்ட்ர நிர்ணய ஸங்க்ரஹ:

(திருமண் காப்பு இட்டுக்கொள்ளும் விதிமுறை)


நூலாசிரியர்

**ஸ்ரீ.உ.வே. ஸ்ரீபெரும்பூதூர் திருநீர்மலை**
**கோமடம் க்ருஷ்ணமாசார்யர்**

பதிப்பாசிரியர்

**ஸ்ரீ.உ.வே. ஸ்ரீபெரும்பூதூர் திருநீர்மலை**
**கோமடம் ஸ்ரீநிவாஸாசார்யர்**



கிடைக்குமிடம்

"பொன்னிசூழ் திருவரங்கம்"
37, மணவாளமாமுனிகள் ஸந்நிதி வீதி,
ஸ்ரீபெரும்பூதூர். தொலைபேசி: 044–27163340


**விலைக்கு அல்ல– வெறிதே கிடைக்கும்– நேரில் கொண்மின்**



அனைத்துலகும் வாழப்பிறந்த எதிராச மாமுனிவன் - ஸ்ரீ பெரும்பூதூர்

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# புண்ட்ர நிர்ணய ஸங்க்ரஹ:

(திருமண் காப்பு இட்டுக்கொள்ளும் விதிமுறை)


நூலாசிரியர்

**ஸ்ரீ.உ.வே. ஸ்ரீபெரும்பூதூர் திருநீர்மலை**
**கோமடம் க்ருஷ்ணமாசார்யர்**

பதிப்பாசிரியர்

**ஸ்ரீ.உ.வே. ஸ்ரீபெரும்பூதூர் திருநீர்மலை**
**கோமடம் ஸ்ரீநிவாஸாசார்யர்**



கிடைக்குமிடம்
"பொன்னிசூழ் திருவரங்கம்"
37, மணவாளமாமுனிகள் ஸந்நிதி வீதி,
ஸ்ரீபெரும்பூதூர். தொலைபேசி: 044–27163340


**விலைக்கு அல்ல– வெறிதே கிடைக்கும்– நேரில் கொண்மின்**

வெளியீடு: விரோதி வருஷம் ஐப்பசித்திருமூலம் (2009)

(புண்ட்ர நிர்ணய ஸங்க்ரஹ: என்னும் இக்ரந்தம் ஸ்ரீபெரும்பூதூரில் நிவஸித்த ஸ்ரீ.உ.வே. கோமடம் கண்ணன் ஸ்வாமி என்கிற க்ருஷ்ணமாசார்யராலே ப்ரகாசிக்கப்பட்டு சென்னை பட்டண நிவாஸிகளான ஸீமை கமலம் ரத்நம் நகை வர்த்தகம் ம.ரா.ரா. ஸ்ரீகோடா முநிரத்நம் ஶ்ரேஷ்டியார் அவர்களாலே ஸகல லோகோஜ்ஜீவநார்த்தமாக வேதம் முத்ராக்ஷர சாலையில் ஸ்ரீமத் பகவத் பாஷ்யகார ஶக 901 ஆவதான ஸ்ரீநளநாம ஸம்வத்ஸரம் ஆவணி மாஸம் அச்சிடப்பட்டு ப்ரசுரம் செய்யப்பட்டது. ) விஜயதே தமாம்.

தற்போது அவர்தம் பௌத்ரராம், ஸ்ரீ.உ.வே. ஸ்ரீபெரும்பூதூர் திருநீர்மலை கோமடம் ஸ்ரீநிவாஸாசார்யரால் ஸ்ரீவிரோதி வருஷம், ஐப்பசித்திருமூலம், மணவாளமாமுனிகள் திருநக்ஷத்ரத்தன்று வெளியிடலாகிறது.)


கணினி அச்சுக்கோத்தவர்
ஸ்ரீமான் உ.வே.கோயில் கந்தாடை இளையவில்லி ஸுதர்ஶநாசார்யர்

வடிவமைப்பு/அச்சுத்தாள் திருத்தம்/மேற்பார்வை:
*ஸ்ரீமான் உ.வே. திருவல்லிக்கேணி (பலாப்பூர் பத்தங்கி) வீரராகவாசார்யர்*
ஸ்ரீமான் உ.வே. ஸ்ரீபெரும்பூதூர் கந்தாடை நந்தகுமாராசார்யர்

அச்சிட்டோர்:
ஆர் என் ஆர் பிரிண்டர்ஸ்,
18, தாண்டவராயன் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005
தொலை பேசி : 28447071 / 28441856

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# அணிந்துரை

புண்ட்ர நிர்ணய ஸங்க்ரஹமென்னும் இந்நூலில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கும் காத்யாயநோபநிஷத் போன்ற உபநிஷத்ப்ரமாண வாக்யங்கள் ஊர்த்வ புண்ட்ரமானது எவ்வாறு தரிக்கப்பட வேண்டும் என்பதைத் தெள்ளத்தெளிவாகக் காட்டுகின்றன.

இது போன்ற வேதவாக்யங்களை ப்ரமாணமாகக் கொண்டே நமது முன்னோர்கள் தமது திருமேனி களிலும், அர்ச்சாதிருமேனிகளிலும் திருமண்காப்பு அணிந்தும், அணிவித்தும் போந்தார்கள்.

குறிப்பாக ஸ்ரீபெரும்பூதூரில் தானுகந்த திருமேனியாய் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானார் திருநெற்றியில் விளங்கும் திருமண்காப்பானது காத்யாயநோபநிஷத் வாக்யங்களை, சித்ர ரூபத்தில் காட்டுவதாய் கச்சிதமாய் அமைந்துள்ளது. பாஞ்சராத்ராகமத்தில் "த்வய்யங்குலம் பாதம்" என்று

திருமண்காப்பில் இரண்டங்குலம் பாதம் இருக்கலாம் என்று ப்ரமாணம் இருந்தாலும் "ஏகாங்குலம் பாததரோரஸ்ய மூலம்" என்னும் காத்யாயநோபநிஷத் வாக்யத்தை ப்ரமாணமாக்கொண்டு ஓரங்குலம் பாதம், அதுவும் அர்த்த சந்த்ராகாரமாய் விளங்கும் திருமண் காப்பை ஸ்ரீபெரும்பூதூர் எம்பெருமானார் திருநெற்றியில் ஸேவித்து மகிழலாம். இத்திருமேனியானது உடையவராலேயே ஆலிங்கநம் செய்யப்பட்டு பாராட்டப்பெற்றதல்லவா?

ப்ரஸங்காத் சிற்சில விண்ணப்பிக்கிறோம். எம்பெருமான்களது அர்ச்சா திருநெற்றிகளிலும் மேலே விளக்கியபடியே திருமண்காப்பு அணிவித்து வரும் ஸதாசாரம் பன்னெடுங்காலமாகவே நமது பாரத தேஶத்தில் நிலவிவருவதொன்றே. இதற்கு பழமையான இலக்கிய ஆதாரங்களும், நமது ஆசார்ய ஸ்ரீஸூக்தி களும், ஸந்நிதிகளில் உள்ள கல்வெட்டுச் சிற்பங்களும் ப்ரபலமான ஆதாரங்களாம். ஆதாரங்களும், ஶிஷ்டாசாரமும் இருக்கச்செய்தேயும் பகவானது திருவடிகளின் வடிவத்திலிருக்கும் திருமண்காப்பை, அவனது திருநெற்றியிலேயே அணிவிப்பது சரியல்லவென்று சிலர் வாதங்கள் செய்து கொண்டு பற்பலரையும் கலக்கி வருகிறார்கள்.

இலக்கிய ஆதாரங்களாக வேதம், ஸ்ம்ருதி, ஆகமம் போன்றவற்றை ஸ்ரீமான் உ.வே. கோமடம் க்ருஷ்ணமாசார்யஸ்வாமி புண்ட்ர நிர்ணய ஸங்க்ரஹத்தில் காட்டியிருக்கிறார். கல்வெட்டுச் சிற்பங்களை நாம் அந்தந்த திவ்ய தேஶங்களில் நேரில் சென்று ஸேவித்துக் கொள்ளப்ராப்தமாம். பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளில் சிற்சிலவற்றையும், முன்னோர்களிடத்தில் அடிபணிந்து கேட்ட சிற்சில ஹித பாஷணங்களையும் வெளிப்படுத்தித் தெளிவுபடுத்துகிறோம், ஸ்வகோஷ்டியிலுள்ள கலங்கியவர்களின் மனந்தெளிய.

ஶுத்தஸத்வமயமான பகவானது திருமேனியில் திருவடியென்றும், திருநெற்றியென்றும் வாசி பாராட்டத்தகாது. திருவடி திருநெற்றி போன்ற வேறுபாடுகளெல்லாம் ப்ராக்ருதர்களுக்கேயன்றி அவனுக்கல்ல. நமது கால்களால் நடக்கவும், ஓடவும், நிற்கவும், உதைக்கவும், மிதிக்கவுமே முடியும், ஆனால் அவனது திருவடிகள் ஸ்வஸங்கல்ப விஶேஷத்தினால் ஜகஜ்ஜந்மஸ்திதி, த்வம்ஶம், மோக்ஷ லாபம் என்னும் விஶேஷ திவ்ய சேஷ்டிதங்களைச்செய்யும், திண்கழலல்லவோ அது. ஆக பகவானது திருவடிகள் தாழ்ந்தவை என்று அநுமானித்துக் கொண்டு அவனது திருநெற்றியில் அத்திருவடியின் ஆகாரத்தில் அமைந்த திருமண்காப்பை சாத்தக்கூடாதென்கிறார்கள்.

ஆழ்வானது வரதராஜஸ்தவமென்னும் ஸ்தோத்ரத்தில் " *ஶ்ரவஶஶ்* ச த்ரு*ஶஶ்* ச *ஶ*ப்த ரூப க்ரஹணேதே நஹி ஜீவவத்வ்யவஸ்தா" என்னும் அடிகளது அர்த்த பரி*ஶீ*லனம் செய்வோம். இதில் ஆழ்வான், எம்பெருமானுடைய திவ்யாவயவங்கள் விலக்ஷண *ஶ*க்திபெற்றவையென்றும், ஜீவர்களைப் போலல்ல அவை என்றும் காட்டுவதை ஸேவிப்போம், மனந்தெளிவோம். அதே வரதராஜஸ்தவத்தில் "உத்தரத்யுபரி பக்தஜநாநிதி .... ஊர்த்வ புண்ட்ர திலகம் பஹுமாநாத் ............வரதஸ்வலலாடே" என்று ஸாதிப்பதைக்காண்க. இங்கு பக்தர்கள் அணிவிக்கும் திருமண்காப்பை, பஹுமாநித்துத்தானும் அணிந்து கொள்கிறான் என்கிறார். இங்கு பஹுமாநமென்பது உயிரான பதமாம். பக்தர்கள் தாம் அணிந்து கொள்ளும் திருமண் காப்பையே அவனும் அணிந்து கொள்கிறான் என்று விளக்கினாலொழிய பஹுமாநம் என்ற பதம் அந்வயியாது.

இன்னும் பற்பல விஷயங்களையும் எடுத்தெழுதலாம். கங்கையென்பதும், திருமாலிருஞ்சோலை மலையில் பெருகி ஓடும் சிலம்பாறும், எம்பெருமானது திருவடி ஸம்பந்தமுடையவையே. அதாவது அவனது ஸ்ரீபாததீர்த்தமே. இனி, கங்கையின் கரைமேலுள்ள

திவ்ய தேஶத்து எம்பெருமான்களுக்கு (திருப்பிரிதி, வதரி, கண்டமென்னும் கடிநகர்) அக்கங்கைநீரைக் கொண்டல்லவோ திருவாராதனம், திருமஞ்சனம், திருத்தளிகை போன்றன கண்டருளப் பண்ணுவது. திருமாலிருஞ்சோலை அழகப்பிரானாருக்கும் சீர்ச்சிலம்பாற்று நீரைக்கொண்டுதான் திருமஞ்ஜனம், திருவாராதனம், திருப்போனகம் போன்ற பலவும் இன்று வரையில் ஸமர்ப்பிக்கப்படுகிறது. ஐயோ, கங்கை நீர் பகவானது ஸ்ரீபாத தீர்த்தமாயிற்றே? அதைக்கொண்டே அவனுக்கு திருவாராதனம் செய்யலாமா? என்று கேட்பாரோ? அதே போலத்தான் திருமண்காப்பு விஷயத்திலும். திருமண்காப்பு எம்பெருமானது திருவடிகளேயானாலும் அதை அவன் திருநெற்றியில் ஸமர்ப்பிப்பது உயர்ந்த ஶிஷ்டாசாரமே. ஏனெனில் அவனது திருவடிகளையும் விட உயர்ந்த ஒரு தத்துவம் உண்டோ?

"புண்ட்ர நிர்ணய ஸங்க்ரஹ:" என்னும் இந் நூலில் இதன் ஆசிரியர் ஸ்ரீமான் உ.வே. திருநீர்மலை கோமடம் க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி பற்பல ப்ரமாணங்களையும் கொண்டு திருமண்காப்பு எவ்வகையில் அணியப்படவேண்டுமென்று விளக்கி எழுதியிருக்கிறார். தெலுங்குலிபியில் முதன் முதலில் அச்சேறிய இந்நூல் தற்போது நூலாசிரியர்தம் பௌத்ரரும் அடியேனது

நண்பரும் ஆப்தருமான வித்வான் ஸ்ரீமான் உ.வே. திருநீர்மலை கோமடம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியால் தமிழில் வெளியிடப்படுகிறது. இந்த ஸ்வாமியும் வடமொழி, ஹிந்தி, தெலுங்கு, தென்மொழி, ஆங்கிலம் போன்ற பல மொழிகளிலும் புலமைபெற்றவரே. இவரே இந்நூலைத் தெலுங்கு பாஷையிலிருந்து தமிழில் மொழி பெயர்த்தவர். அன்பர்கள் இந்நூலினை ஊன்றி வாசித்துப்பயனடைக. இந்த ஸ்வாமி இது போல் மேன்மேலும் பற்பல ஸம்ப்ரதாய க்ரந்தங்களை லோகோபகாரமாய் வெளியிடவேண்டுமென்று எம்பெருமானார் திருவடிகளில் விண்ணப்பித்து விடைகொள்கிறேன்.

ஸ்வஸ்தி ஸ்ரீவிரோதி ஸம்வத்ஸரம்

ஐப்பசித்திருமூலம்

தாஸன்

கோயில் கந்தாடை இளையவில்லி ராமாநுஜாசார்ய:,

ஸ்ரீபெரும்பூதூர்

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

## ஒரு விண்ணப்பம்

நூறு ஆண்டுகளுக்கு முன் தெலுங்கு எழுத்தில் அச்சிடப்பட்ட இந்நூல் தற்பொழுது தமிழ்லிபியில் வெளிவருகிறது.

இந்நூலில் திருமண்காப்பைப்பற்றி அநேக ப்ரமாணரத்நங்களைக் கொண்டு வெகுதூரம் விசாரம் செய்து ஸித்தாந்தம் செய்யப்பட்டிருக்கும் விஷயம் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு மஹோபகாரகமாக இருக்குமென்பதில் சிறிதும் அதி*ஶ*யோக்தியில்லை.

### நூலாசிரியர் வைபவம்

உபயவேதாந்த ப்ரவர்த்தகாசார்ய *ஶ*ப்தத்திற்கு அத்விதீய லக்ஷ்யபூமியாக இங்கே ஸேவை ஸாதித்தருளும் ஸ்வாமி கல்வியாலும் பிறப்பாலும் அடியேனுக்கு பிதாமஹராவார்.

இம்மஹானது முன்னோர்கள் திருநீர்மலையில் நீர்வண்ணனுக்கு நித்ய கைங்கர்யம் செய்து கொண்டு திருநீர்மலையையே வாஸஸ்தாநமாகக் கொண்டிருந்தபடியால் இவர் ''திருநீர்மலை கண்ணன் ஸ்வாமி'' என்றே ஸுப்ரஸித்தராய் நம்மிராமாநுசன் திருவடித்தாமரைகளையே தஞ்சமாகப் பற்றி ஸ்ரீபெரும்பூதூரிலேயே நித்யவாஸமாக எழுந்தருளி இருந்தார். ஒரு ஸமயம் இந்த ஸ்வாமி ஸ்ரீகாஞ்சீ பேரருளாளப்பெருமாளுடைய ப்ரஹ்மோத்ஸவ வைபவத்தையநுபவிக்க பெருமாள்கோயிலுக்கு எழுந்தருளினார். அங்குள்ளவர்கள் ப்ரார்த்தித்தபடியால் மணவாளமாமுநிகள் ஸந்நிதியிலும் நூற்றுக்கால் மண்டபத்திலும் உபந்யாஸங்கள் நிகழ்த்தினார். அப்பொழுது அங்கு நடந்தவொரு நிகழ்ச்சியினை ஸ்ரீகாஞ்சீ மஹாவித்வான் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி 1908 ஆம் ஆண்டில் வெளியிட்ட 'திவ்யப்ரபந்த வைபவ விவேக:' என்னும் தமது நூலில் இந்த ஸ்வாமியின் பாண்டித்யம், உபந்யாஸ வைகரி முதலானவற்றை விஸ்தாரமாக எழுதியுள்ளார்.

அதை எல்லோரும் வாசித்து இன்புற வேண்டுமென்னும் எண்ணத்தினால் விரிவுக்கு அஞ்சாமல் எழுதுகிறேன். அப்பொழுது ஸ்ரீகாஞ்சீ ஸ்வாமிக்கு வயது 18 ஆம். இனி "திவ்யப்ரபந்த வைபவ விவேக:" க்ரந்தத்தில்

ஸ்ரீகாஞ்சீ ஸ்வாமியால் எழுதப்பட்ட விஷயத்தைக் காண்போம்.

"வாரீர் வித்வந்மணிகளே! இப்போது நடை பெறுகிற இந்த ப்லவங்க நாம ஸம்வத்ஸரத்தில் வைகாசி மாஸத்தில் ஸ்ரீகாஞ்சீயில் நடைபெற்ற தேவாதிராஜ பகவானுடைய ப்ரஹ்மோத்ஸவத்தில் ஒன்பதாம் திருநாளில் திருநீர்மலை திவ்யதேஶவாஸியான கிருஷ்ணமாசார்யஸ்வாமி தமிழ் மொழியைப் பற்றிப்பேசிவரும்போது அதன் தொடர்புடையதான திவ்யப்ரபந்தத்தின் வைபவத்தைப்பற்றி ஓர் உபந்யாஸம் செய்தருளினர். அப்போது அவ்வுபந்யாஸத்தினிடையில் குற்றங்கண்டு பிடிப்பதில் ஆவலுள்ள சிலர் "விஶேஷத: ஸர்வ விதாம் ஸமாஜே விபூஷணம் மௌநம் அபண்டிதாநாம்" (ஸர்வஜ்ஞர்கள் குழுமியுள்ள கோஷ்டியில் புலமையில்லாதவர்கள் பேசாமலிருப்பதென்பது அவர்களுக்குச் சிறந்ததோர் அணியாகும்) என்ற பெரியோருரையை மறந்து அவ்வுபந்யாஸகரான கிருஷ்ணமாசார்யரைக் குறித்து, ஆராய்ந்தால் நிலைத்து நிற்கமாட்டாத ஆக்ஷேபங்களைச் செய்தனர். (ஆக்ஷேபங்கள் எப்படிப்பட்டவை என்பது மேலே விளங்கும்). மிகச்சிறிய அவ்வாக்ஷேபத்துக்கு விடையிறுப்பது அவசியமன்றாயினும், இந்த ஸ்வாமி

'துஷ்யது' (மகிழ்ந்துபோகட்டும்) என்ற நியாயத்துக்குச்சேர அப்போதே சுருக்கமாக விடை கூறியும் மறுநாள், திவ்யப்ரபந்த வைபவத்தை நிஶ்சயிப்பதில் மிகவும் பொறுப்பை வகித்தருளிய ஸ்ரீவேதாந்த தேஶிகருடைய ஸந்நிதிக்கு அருகில் மிக விவரமாக விடையளித்தும், தம்முடைய கொள்கையை அல்லது வித்வான்களுடைய கொள்கையை ஸித்தாந்தம் செய்தார். இவ்விஷயமானது அடியேனால் கேரள நாட்டைச்சேர்ந்த பட்டாம்பியென்னும் பட்டணத்திலிருந்து வெகு நாட்களாக வெளிவருகின்ற "விஜ்ஞான சிந்தாமணி" என்னும் பெயருடைய வடமொழி வாரச் செய்தியிதழில் வெளியிடப் பட்டது, அது வருமாறு,

"ஒரு விண்ணப்பம் ஐயா, சிந்தாமணியை அன்புடன் வாசிக்கும் பெரிய மனம் படைத்தவர்களே! இவ்வாண்டில் ஸ்ரீகாஞ்சீயில் வைகாசி மாதம் பதினோராவது நாள் (தேதி) தொடங்கி இருபதாம் நாள் வரையில் தேவாதிராஜ பகவானுடைய ப்ரஹ்மோத்ஸவம் மிக மிக உயர்ந்த வகையில் நடைபெற்றதென்பதை நண்பர்களனைவரும் அறிவார்களேயன்றோ? இவ்வுத்ஸவத்தில் ஆங்காங்கு தேஶாபிமாநிகள் பலர் தம்முடைய தேசத்தைப்பற்றிய பல உபந்யாஸங்களைச் செய்தனர். ஆறாந்திருநாளன்று மணவாளமாமுநிகள் ஸந்நிதியில் திருநக்ஷத்ரோத்ஸவம் பெரிய வைபவமாக

ஆஸ்திகப் பெருமக்களால் நடத்திவைக்கப்பட்டது. அப்போது பண்டிதஸ்ரேஷ்டரான திருநீர்மலை க்ருஷ்ணமாசார்யவர்யர் ப்ரபத்தியைப்பற்றி ரஸிகர்களின் மனத்தை மகிழ்விக்க வல்லதோர் உபந்யாஸத்தை நிகழ்த்தினார். இவரது பாண்டித்யத்தின் வைகரியைப் பற்றி இங்கு ஏது மெழுத விரும்புகின்றிலேன். ஏனெனில் அதை யெழுதுவதானால் நான் இப்போது மென்றதையே மெல்லுபவனாகவும் அரைத்தமாவையே அரைப்பவனாகவும் ஆகிவிடுவேன். இருப்பினும் சுருக்கமாக அவரது பெருமையைத்தெரிவிக்கிறேன். அவர் பாராத காவ்ய நாடக அலங்காராதி க்ரந்தங்கள் இல்லை. அவர் நுகராத ஶாஸ்த்ரநறுமணம் கிடையாது. அவர் ஆராயாத புராணம் ஒன்றுமில்லை. அவர் பரிசயம் பண்ணாத மதாந்தர நூல்கள் அப்ரஸித்தம். பல பேசி என்? ஸர்வஜ்ஞரென்றே சொல்லத்தக்கவரிவர் என்பது அடியேனுடைய உட்கருத்தாகும். ப்ரபத்தி விஷயமான இவ்வுபந்யாஸத்தில் இவர் பல பல யுக்திகளையும் ப்ரமாணங் களையும் கொண்டு, ப்ரபத்தியை அடிக்கடி செய்வதை மறுத்துரைத்து ஒரு தடவையே செய்ய வேண்டு மென்று ஸித்தாந்தம் செய்தனர்.

பேரறிவாளரான இவர் ஒன்பதாந் திருநாளன்று மாலையில் தேவப்பெருமாள் கோவிலுக்குள்ளிருக்கும்

நூற்றுக்கால் மண்டபத்தில் த்வைதம், அத்வைதம், விஶிஷ்டாத்வைதமாகிய இம்மூன்றுக்குமுள்ள வாசியை மிகவும் திறம்பட உபந்யஸித்தனர். நண்பர்களே! இவ்வுபந்யாஸத்தைக் காது கொடுத்துக்கேட்டவர்கள் அன்றோ காது படைத்தவர்; கேளாதவர்கள், செவிடர்கள்.

பத்தாம் திருநாளன்று அதேயிடத்தில் அதே ஸமயத்தில் ஓர் உபந்யாஸத்தைத் தொடங்கினார். இதுதன்னில் ஸம்ஸ்க்ருத வேதத்தைவிட த்ராவிட வேதத்துக்கு உண்டான பெருமையை வெகுவான யுக்திகளையும் ப்ரமாண ரத்னங்களையும் காட்டி, நிர்த்தாரணம் செய்தார். அதில் பொறாமை கொண்ட ஒரு பிரிவினரில்; பண்டிதர்கள், மிகப்பண்டிதர்கள், மிகமிகப்பண்டிதர்கள் அல்லது தம்மைப்பண்டிதர்களாக நினைத்துக் கொண்டவர்கள் சிலர் இப்படி ஆக்ஷேபம் செய்தனர்.

“பல ப்ரமாணக்ரந்தங்களில் த்ராவிட பாஷை ம்லேச்சபாஷையென்னும் விஷயம் நன்றாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. மேலும் பாஷாகாநம், (ஸம்ஸ்க்ருத பாஷையொழிந்த மற்ற) தேஶ பாஷைப்பாட்டு பாடக்கூடாது என்று ஆங்காங்கு நன்றாக கோஷிக்கப்படுகிறது. இங்ஙனமிருக்கவும் நீங்கள் திவ்ய ப்ரபந்தத்திற்கு

உயர்த்தியையும் வேதத்வத்தையும் கூறுகிறீர்கள்'' என்று. அதற்கு விடையும் இப்பண்டிதரால் இங்ஙனம் கூறப்பட்டது.

"த்ராவிட வேதத்தின் உயர்த்தியைத் தெரிவிக்கின்ற நூறுப்ரமாணரத்நங்கள் கீழே என்னால் காட்டப்பட்டன. இப்போது பாஷைப்பாட்டுப் பாடக்கூடாது'' என்னும் வாக்யம் த்ராவிட வேதமாகிய திவ்யப்ரபந்தமொழிந்த மற்றவற்றைப் பற்றி எழுந்தது.

எப்படியானால் " காவ்யாலாபாந் ச வர்ஜயேத்'' (காவ்யம் வாசித்தலை விட்டொழியக் கடவன்) என்ற வாக்யம் ஸ்ரீராமாயணம் முதலிய நற்காவ்யங்களைத் தவிர்ந்த மற்ற காவ்யங்களைப்பற்றி எழுந்ததோ அப்படியே இதுவும். மேலும் இத்திராவிட பாஷை ம்லேச்சபாஷையாக இருந்தால், உங்கள் ப்ரதாந ஆசார்யரான ஸ்ரீமந்நிகமாந்த தேசிகருக்கு த்ராவிட திவ்யப்ரபந்தத்தில் உள்ள ஆதரம் அடியோடு பொருந்தாததொன்றாகும். அவர் அருளிய திவ்ய ப்ரபந்தங்களுக்கு நீங்களிசையும் பெருமை சிறிதும் சேராதுபோய்விடும். அவற்றில் உங்களுக்குள்ள மதிப்பு பொய்யானதாகிவிடும். மேலும் திவ்யப்ரபந்தங்களை வெளியிட்ட பராங்குச பரகாலாதிகளான ஆழ்வார்களை விக்ரஹ ரூபத்தில் ப்ரதிஷ்டை செய்து பூஜிக்கிறார்களே யொழிய ஸம்ஸ்க்ருத வேத ப்ரவர்த்தகர்களான வ்யாஸ

பராஶராதிகளை அங்ஙனம் பூஜிப்பதில்லை, என்றிவை முதலிய ப்ரமாணங்கள் திவ்ய ப்ரபந்தத்தின் உயர்த்தியை அறிவிக்கின்றன. ஆகையால் (திவ்யப்ரபந்தம் தாழ்ந்த தென்னும்) உங்களுடைய தீய பேச்சு பொருந்தாது. நாங்களோவென்னில் ப்ரமாணங்களுக்கு கட்டுப்பட்டுள்ளோம். எமது வார்த்தையை இசைவதற்கு இசைவுண்டாகில் இசையக்கடவீர். மறுக்க விருப்பமுண்டேல் மறுக்கக்கடவீர். இதனால் எனக்கு லாபமோ, நஷ்டமோ ஏதுமில்லை என்பதே அப்பண்டிதர் கூறிய விடை.

அப்போது அருகிலிருந்த ஒருவர் "தேவரீருடைய இவ்வார்த்தையை இவர் இசையாவிடில், உடனே தம் நெற்றியில் விளங்கும் திருமண்காப்பைத் துடைத்துவிட்டு கிறிஸ்துவமதத்தில் சேரட்டும்" என்று உரக்கச்சொல்லி ஓய்ந்தார். உபந்யாஸ கர்த்தாவாகிய இப்பேரறிவாளர் தாம் தொடங்கிய உபந்யாஸத்தை மிகவும் அழகிய நடையில் சொல்லி முடித்தார். ஆக்ஷேபித்தவர் "பிறகு பார்த்துக் கொள்வோம்" என்று கூறிவிட்டு வந்தவழியே வீடு திரும்பினார். ஆஶ்சர்யம்! எத்தகையது ஆக்ஷேப வார்த்தையின் போக்கு, எப்படிப்பட்டது பொறாமையின் நடை. நண்பர்களே அறிவார்களாக.

இதுதான் இந்த ஸ்வாமியைப்பற்றி தம் முதல் நூலான "திவ்யப்ரபந்த வைபவ விவேக:"க்ரந்தத்தில் ஸ்ரீகாஞ்சீ

ஸ்வாமியால் எழுதப்பட்ட விஷயமாகும். இந்த ஸ்வாமி விஷயமாக ஒரு செய்யுளும் எழுதியுள்ளார்.

"நீர்மலையிற் கண்ணனுடைய நேரான சொற்களிலே சீர்மைதனை யுணராதே தீய கொடுஞ்சொற்களையே, ஊரறிவோம் பேரறியோ மென்றிருக்குஞ் சில மனிசர், கூறி மிகவபசாரக் குழியதனை புக்காரே"

## திருமண்காப்பு விஷயம்

ஸ்ரீமத் பரமஹம்ஸ எம்பார்ஜீயர் ஸ்வாமியும், கோமடம் ஸ்வாமியும், ஸ்ரீமத் வேதாந்த தேசிகர் 'ஸச்சரித்ர ரக்ஷா' என்னும் க்ரந்தத்தில் காட்டியுள்ள ஊர்த்வபுண்ட்ர விஷயமான பல ஆகாரங்களையும் சேமித்து வைத்திருந்தனர்.

அவற்றையெல்லாம் ஸ்ரீகாஞ்சீஸ்வாமி, கோமடம் ஸ்வாமி திருக்குமாரரும் அடியேனுக்குத் திருத்தகப்பனாருமான ஸ்ரீ.உ.வே வித்வான் ராமாநுஜாசார்ய ஸ்வாமியிடமிருந்து பெற்றுக் கொண்டு, காஞ்சிக்குச் சென்று, "தென்னாசார்ய ஸம்ப்ரதாயம்" என்னும் பெயர் கொண்ட ஒரு நூலில் அந்த ஊர்த்வபுண்ட்ர ஆகாரங்களையெல்லாம் வெளியிட்டார். இனி அந்நூலிலுள்ள விஷயங்களைப் பார்ப்போம்.

"ஸ்ரீமத் வேதாந்த தேசிகர் ' ஸச்சரித்ர ரக்ஷா' என்றொரு வடமொழி நூல் அருளிச்செய்துள்ளார். அதில்

ஊர்த்வபுண்ட்ர விஷயமாக வெகுதூரம் சர்ச்சை செய்திருக்கிறார்.

தீபாகாரம், வேணுபத்ராகாரம், பத்மமுகுளாகாரம், குமுதாகாரம், மத்ஸ்யாகாரம், கூர்மாகாரம், சங்காகாரம், ஸர்ப்பாகாரம், துத்தூரபுஷ்பகாரம் (ஊமத்தம்பூ), தண்டாகாரம், திந்த்ரிணீபத்ராகாரம் என்றிப்படி அநேக ஊர்த்வ புண்டராகாரங்கள் ஆங்காங்கு ஶாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டிருப்பதாக உதாஹரித்துக்காட்டி, இவை எல்லாவற்றினுள்ளும் ஹரிபாதத்வயாகாரமே உத்தமமென்றும், ஏகாந்தித்வ ரஹித வைஷ்ணவர்களுக்கு மற்ற ஆகாரங்கள் உபாதேயங்களாகலாமென்றும் அந்த ஸச்சரித்ர ரக்ஷையிலேயே முடிவு கட்டியிருக்கிறார்.

உத்தம ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு உரியவையல்ல வென்று ஸ்ரீதேஶிகரால் கருதப்பட்ட ஆகாரங்களை அச்சிட்டுக்காட்டினால் விஷயம் நன்கு விளங்குமென்று தோன்றி அவை அடைவே அச்சிட்டும் காட்டப்படுகின்றன. (அந்த ஆகாரங்களை யெல்லாம் அச்சிட்டுக்காட்டிவிட்டு) ஆக இவ்வளவும் காட்டப்பட்டுள்ள ஆக்ருதிகள் ஸச்சரித்ர ரக்ஷையில் தேஶிகரால் உதாஹரிக்கப்பட்டவையே. கீழே காட்டிய ஊர்த்வபுண்ட்ர ஆகாரங்கள் ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி எம்பார் ஜீயர் ஸ்வாமியாலும், ஸ்ரீ.உ.வே. திருநீர்மலை கோமடம் கண்ணமாசாரியர்

ஸ்வாமியாலும் சேமிக்கப்பட்டவையென்றுணர்க என்று முடித்துள்ளார் ஸ்ரீகாஞ்சீ ஸ்வாமி. இதிலிருந்து ஒன்றான எம்பார்ஜீயர் ஸ்வாமியும், கோமடம் ஸ்வாமியும் இணைந்து பல ஸத்கார்யங்கள் செய்துள்ளார்கள் என்பது புலனாகிறது.

ஸர்வஜ்ஞ ஸார்வபௌமரான பிள்ளைலோகாசார்யர் அருளிய "ஸ்ரீவசநபூஷணம்" என்கிற திவ்ய ரஹஸ்ய க்ரந்தத்துக்கு எம்பார் ஜீயர் ஸ்வாமி ஸாதித்த அரும்பதவுரையைப் பட்டோலை கொண்டவரும் இந்த கோமடம் ஸ்வாமியேயாவார்.

இந்நூலில் இறுதியில் இந்த ஸ்வாமி ஸாதித்த "த்வயத்தின் விஶேஷார்த்தம்" என்கிற வ்யாஸம் வெளியிடப்பட்டுள்ளது. அதில் " இந்த அர்த்த விஶேஷத்தை பரம க்ருபையுடைய பிள்ளைலோகாசார்யர் அருளிச் செய்த "யதுகிரீஶ பஞ்சாஶத்" என்கிற ஸ்தோத்ரத்தில் காணலாம்" என்று ஸாதித்துள்ளபடியால் பிள்ளைலோகாசார்யர் "யதுகிரீஶ பஞ்சாஶத்" என்கிற ஸ்தோத்ர க்ரந்தம் அருளியுள்ளதாகத் தெரிய வருகிறது. ஆனால் அந்த ஸ்தோத்ரக்ரந்தம் கிடைப்பது அரிதாயுள்ளது. ஸ்ரீவைஷ்ணவஸ்வாமிகளுடைய திருமாளிகையில் உள்ள ஓலைச்சுவடிகளில் இந்த ஸ்தோத்ரம் இருப்பதற்கு வாய்ப்பு உண்டு. மஹாநுபாவர் திருக்கரங்களில் கிடைக்கப்பெற்று அடியேனுக்கு

உதவினால் க்ருதஜ்ஞதையுடையவனாய் இருப்பேன் என்பதை ஸவிநயம் விண்ணப்பித்துக் கொள்கிறேன்.

இந்நூலிற்கு அணிந்துரை எழுதி உபகரித்தவரும், அடியேனது ஆப்தருமான ஸ்ரீமான் உ.வே. கோயில் கந்தாடை இளையவில்லி ராமாநுஜாசார்ய ஸ்வாமியின் திருவடிகளில் அடியேனது க்ருதஜ்ஞதாநுஸந்தானங்களை விண்ணப்பித்துக் கொள்கிறேன். கணினியின் மூலம் அச்சுக்கோத்துக்கொடுத்த ஸ்ரீமான் உ.வே. கோயில் கந்தாடை இளையவில்லி ஸுதர்ஶநம் ஸ்வாமிக்கும், மூலத்துடன் கணினியின் நகலை ஒப்பிட்டு பார்த்து கொடுத்த ஸ்ரீமான் உ.வே. ஸ்ரீபெரும்பூதூர் கந்தாடை நந்தகுமாரன் ஸ்வாமிக்கும் அடியேனது க்ருதஜ்ஞதாநு ஸந்தாநங்களை விண்ணப்பித்துக் கொள்கிறேன். நூல் வெளியிடுவதற்கு உதவி புரிந்த ஸ்ரீமான் அழகர் திருமலை மாடபூசி ஸ்ரீதர: ஸ்ரீநிவாஸனுக்கு பல்லாண்டு பல்லாண்டு. ஸர்வாபீஷ்டஸித்திரஸ்து.

சூடிக்கொடுத்தவள் தொல்லருளால் வாழ்கின்ற வள்ளலாம் எம்பெருமானார் திருவடிகளில் இந்நூலினை ஸமர்ப்பிக்கிறேனடியேன்.


தாஸாநுதாஸன்,

ஸ்ரீபெரும்பூதூர் திருநீர்மலை கோமடம் ஸ்ரீநிவாஸன்.

ஜெய் நகர், பெங்களூர். தொலைபேசி: 080 – 22447172

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# புண்ட்ர நிர்ணய ஸங்க்ரஹ:

ஸ்ரீராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்தாமபிவர்த்ததாம்.

ஶ்ரிய: பதியாய், அவாப்த ஸமஸ்தகாமனாய், ஸமஸ்த கல்யாணகுணாத்மகனான ஸர்வேஶ்வரன் இருள்தரு மாஞாலமாகிய (அதாவது அஜ்ஞாநத்தையே விளைக்கும்படியான) பெரிய பூமண்டலத்தில் சேதநர்கள் அஜ்ஞாநாந்தகாரத்தில் மூழ்கி அஹங்கார மமகாரத்தாலே நசித்துப்போவதைக்கண்டு "தயமாந மநா:" என்கிறபடியே மிகவும் தயையுடையவனாய் ப்ரஹ்மாதிகள் மூலமாய் "ஶ்ருதி: ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா" என்கிறபடியே தனது ஆஜ்ஞாரூபங்களான ஶ்ருதிஸ்ம்ருதீதிஹாஸ புராணாகமம் முதலான ஶாஸ்த்ரங்களை வெளிப் படுத்தியும், அவைகளினுடைய அர்த்தங்களை " தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே" என்கிறபடியே ராமக்ருஷ்ணாத்யவதார முகத்தாலே தானே

உபதேஶித்தும் அநுஷ்டித்தும் காட்டினான். அதுவும் போதாதென்று நித்யஸூரிகளான ஆழ்வார்களையும், ஆசார்யர்களையும் அவதரிப்பித்து அவர்கள் மூலமாய் உபதேசிப்பித்தும், அநுஷ்டிப்பித்தும் காட்டிக் கொடுத்திருக்கச் செய்தேயும் அவைகளைக் கண்டும், அநுஷ்டித்தும் அநேகர்கள் நல்வழியை அடைந்து வாழ்ந்ததையும், ஆஸுர ப்ரக்ருதியானவர்கள் அஸூயையினால் பகவதாஜ்ஞாரூபமான வேதாதி ப்ரமாணங்களுக்கு விருத்தமாயும், அவற்றிற்கு தப்பர்த்தங்களையும் செய்து பாமர ஜநங்களைத் தங்களுடைய துருபதேஶ வலையுள் அகப்படுத்தி "ஸ்வயம் ப்ரஷ்ட: பராந் நாஶயதி" என்று பகவத் பாகவதாசார்ய விஷயங்களில் தாமும் அபசாரப்பட்டு நசித்து, பிறரையும் நசிக்கச்செய்கிறார்கள்.

அவர்களது விநாஶம் ஸஹியாது அவர்களைச் சீர்திருத்துவதற்கன்றோ க்ருபாமாத்ர ப்ரஸந்ந ஆசார்யராகிய பகவத்ராமாநுஜாசார்ய ஸ்வாமி அவதரித்தது. அதற்கென்றேயன்றோ ஆசார்ய பரம்பரைகளை அவர் ஏற்படுத்தினதும். அங்ஙனமாக அவர் நியமநத்தை அநுஷ்டாநத்திற்குக் கொண்டு வர வேண்டியது நம்முடைய கடமையாகையாலும்,

ஸகல ப்ராணிகளுடைய க்ஷேமத்தையும் கோரியிருப்பதாகையாலும், ஶாஸ்த்ரார்த்தங்களை பண்டித பாமரர்களெல்லாரும் ஸுலபமாயுணரும்படி பெரியோர்களிடத்தில் கேட்ட அர்த்த விஶேஷங்களைச் சுருக்கமாய் இங்கு எழுதலானோம்.

"வேதமே ப்ரமாணம். வேதத்திலும் (அச்சில் வந்த) 108 உபநிஷத்துகளே முக்யம், அவற்றிலும் வாஸுதேவோபநிஷத்தே முக்யம், அதில் கோபீ சந்தநத்தால் அச்சித்ரமாய் அதாவது நடுவில் இடைவெளியில்லாமல் ஒரே ரேகையாய் முகத்தில் (நெற்றி) முதலான இடங்களில் தரிக்க வேண்டியதே முக்யம், வேறு எவ்வித புண்ட்ரங்களையும் தரிக்கக் கூடாது, தரித்தால் அவர்களுக்கு நரகமே பலம். ஸ்ம்ருதீதிஹாஸ புராணாகமாதிகள் ப்ரமாணமன்று" என்றும் சில குத்ருஷ்டிகள் சொல்லுவர்கள்.

அது ப்ரமாணத்தோடு சேராது. ஆகையால் உதாஸீநம். இதற்கு ஸமாதானம் என்னவென்றால் நாலு வேதங்களும் முக்ய ப்ரமாணங்களென்பதும், அவைகளுக்கு அங்கங்களாகிய ஶிக்ஷாதிகளும், உபப்ருஹ்மணங்களான ஸ்ம்ருத்யாதிகளும் ப்ரமாணங்கள் என்பதும், ஆர்யர்களான ஸர்வஜந ஸம்மதம். மேலும்

“அஹரஹஸ் ஸந்த்யா முபாஸீத” (திநந்தோறும் ஸந்த்யா வந்தநம் செய்யக்கடவன்) “அஷ்டவர்ஷம் ப்ராஹ்மண முபநயீத” (ப்ராஹ்மணனுக்கு 8 ஆவது வயஸ்ஸில் உபநயநம் செய்ய வேண்டியது) என்று மட்டும் வேதத்தில் விதிகள் காணப்படுகின்றன. அவைகளை விஶதமாகச் செய்ய வேண்டிய ப்ரகாரங்களைச் சொல்லும் ப்ரமாணங்கள் ஒன்றும் நமக்கு இப்போது ஓதப்படுகிற வேதத்தில் கிடைக்கவில்லை. ஆகிலும் உபநயநாதிகள் செய்கிறோம்.

இதற்கு ப்ரமாணமென்னவென்றால் “ஸஹோவாச வ்யாஸ: பாராஶர்ய:” என்கிறபடி பராஶர புத்ரராகிய வ்யாஸ பகவான் சொன்னார். “யத்வை கிஞ்ச மநுரவதத் தத்பேஷஜம்” அதாவது மநு எதை சொன்னாரோ அதை ஔஷதமாக நினைக்க வேணு மென்று சொன்னமையால், மந்வாதி வாக்யங்கள் நமக்கு உத்தேஶ்யமும் கர்த்தவ்யமுமாயின. “ப்ரஹ்ம வாதிநோ வதந்தி” (ப்ரஹ்மஜ்ஞாநிகள் சொல்லுகிறார்கள்) “யாந்யஸ்மாகஞும் ஸுசரிதாநி தாநி த்வயோபாஸ்யாநி நோ இதராணி” (நாம் எதைச் செய்கிறோமோ அதையே நீ செய்ய வேண்டியது; வேறொன்றையும் செய்யக்கூடாது ) ப்ரஹ்மஜ்ஞாநிகளாகிய மநு, வ்யாஸர் முதலான பரமர்ஷிகளால் செய்யப்பட்ட ஶாஸ்த்ரங்களுக்கும்

ஆசாரங்களுக்கும் ப்ராமாண்யத்தைச் சொல்லி, அந்தப்படிக்கே நீங்களும் செய்ய வேண்டுமென்று ப்ரபல ப்ரமாணமான வேதத்திலேயே சொல்லியிருக்கிறது. அதையே அநாதி காலமாய் நாம் அநுஸரித்து அநுஷ்டித்து வருகிறோமல்லவா? இப்படியிருக்க இந்த ராக்ஷஸ வர்ஷமானது சில புண்ய ஜநங்களுக்கு நாம் அநாதியாய் நெற்றி முதலான த்வாதஶாங்கங்களில் தரித்து வருகிற புண்ட்ரத்தில் மட்டில் ஸந்தேஹத்தை விளைத்து விட்டது போலும்? இவ்விராக்ஷஸ வர்ஷம் கலி வைபவ ப்ரகாஶத்திற்கு அக்ரகண்யம் போலும்.

“எல்லா ஶாஸ்த்ரங்களையும் பார்த்தாலொழிய ஓரர்த்தம் நிச்சயிக்கப்படமாட்டாது”, என்று விளங்கிய ஸர்வஶாகாப்ரத்யய ந்யாயத்தாலும் “உபக்ரம உபஸம்ஹாராவப்யாஸோ பூர்வதாபலம் அர்த்தவதோபபத்திஶ்ச லிங்கம் தாத்பர்ய நிர்ணயே” என்று ஶாஸ்த்ரத்தால் ஓரர்த்தம் நிஶ்சயிக்க வேணுமானால் உபக்ரமாதி ஷட்வித காரணத்தாலேயே நிஶ்சயிக்க வேணுமென்று ந்யாயங்கள் ஏற்பட்டிருக்கிறபடியாலும், அவற்றை அநுஸரித்து எல்லா ஶாஸ்த்ரங்களையும் பார்த்தால்தான் ஸம்ஶயமற்று ஓரோர் அர்த்தத்தையும் நிஶ்சயிக்கலாம். அப்படியே

கல்லாவிடில் பிறவிக்குருடர்கள் ஒன்றாய்க்கூடி யானையின் ஸ்வரூபத்தைக் கண்டுபிடித்தது போலும், பாலின் ஸ்வரூபத்தைக் கண்டுபிடித்தது போலும் ஆகுமல்லவா? அச்சித்ரமான ஊர்த்வபுண்ட்ரத்தைச் சொல்லியிருக்கிறதாய் ப்ரமித்துச் சிலர் சொல்லுகிற வாஸுதேவோபநிஷத்தையும் இங்கு உதாஹறிக்கிறோம். அது இரண்டு ரேகாரூபமான ஸச்சித்ர ஊர்த்வபுண்ட்ரத்துக்கே ஸாதகமானதென்று யாவர்க்கும் புலப்படும். (அதாவது சென்னப் பட்டணம் ஆதி கலாநிதி முத்ரா யந்த்ரத்தில் 1883 ஆவது வருஷத்தில் அச்சிடப்பட்ட 108 உபநிஷத் புஸ்தகத்தில் வாஸுதேவோபநிஷத் 525,526, 527 ஆம் பக்கங்களில் பார்க்க.)

"ஓம் நமஸ்க்ருத்ய பகவாந் நாரத: ஸர்வேஶ்வரம் வாஸுதேவம் பப்ரச்ச அதீஹி பகவந் ஊர்த்வ புண்ட்ரவிதிம் த்ரவ்ய மந்த்ர ஸ்தாநாதி ஸஹிதம் மே ப்ரூஹீதி தகும் ஹோவாச பகவாந் வாஸுதேவ:, வைகுண்ட ஸ்தாநாத் உத்பந்நம் மம ப்ரீதிகரம் மத்பக்தை: ப்ரஹ்மாதிபி: தாரிதம் விஷ்ணு சந்தநம் மமாங்கே ப்ரதிதிநம் ஆலிப்தம் கோபீபி: ப்ரக்ஷாளநாத் கோபீசந்தநமாக்யாதம். மதங்கலேபநம் புண்யம் சக்ர தீர்த்தாந்த ஸ்திதம் சக்ர ஸமாயுக்தம் பீதவர்ணம் முக்தி

ஸாதநம் பவதி அத கோபீ சந்தநம் நமஸ்க்ருத்ய உத்த்ருத்ய கோபிசந்தந பாபக்ந விஷ்ணுதேஹ ஸமுத்பவ, சக்ராங்கித நமஸ்துப்யம் தாரணாத் முக்திதோ பவ, இமம் மே கங்கேதி ஜலமாதாய விஷ்ணோர்நுகமிதி மர்தயேத். அதோ தேவா அவந்துந இத்யேதை: மந்த்ரை: விஷ்ணு காயத்ர்யா கேஶவாதி நாமபிர் வா தாரயேத். ப்ரஹ்மசாரீ வாநப்ரஸ்தாவா லலாட ஹ்ருதய கண்ட பாஹுமூலேஷு வைஷ்ணவ காயத்ர்யா க்ருஷ்ணாதி நாமபிர் வா தாரயேத். இதி த்ரிவாரம் அபிமந்த்ர்ய "ஶங்க சக்ர கதாபாணே த்வாரகா நிலயாச்யுத கோவிந்த புண்டரீகாக்ஷ ரக்ஷமாம் ஶரணாகதம்" இதி த்யாத்வா, க்ருஹஸ்தோ லலாடாதி த்வாதஶ ஸ்தலேஷு அநாமிகாங்குல்யா வைஷ்ணவ காயத்ர்யா கேஶவாதி நாமபிர் வா தாரயேத். ப்ரஹ்மசாரீ க்ருஹஸ்தோ வா லலாட ஹ்ருதய கண்டபாஹுமூலேஷு வைஷ்ணவ காயத்ர்யா க்ருஷ்ணாதி நாமபிர் வா தாரயேத். யதி: தர்ஜந்யா சிரோ லலாடே ஹ்ருதயேஷு ப்ரணவேநைவ தாரயேத். ப்ரஹ்மாதய: த்ரயோ மூர்த்தய: திஸ்ரோ வ்யாஹ்ருதய: த்ரீணி சந்தாகும்ஸி, த்ரயோக்நய: இதி ஜ்யோதிஷ்மந்த: த்ரய:காலா: திஸ்ரோ, அவஸ்தாத்ரய ஆத்மாந: புண்ட்ரஸ்த்ரய ஊர்த்வா: அகார உகார மகார ஏதே ப்ரணவமயோர்த்வபுண்ட்ரா: ததாத்மா

ததேததோமிதி, தாநேகதா ஸமபவத், ஊர்த்வமுந்நமயத, இத்யோங்காராதிகாரீ, தஸ்மாதூர்த்வபுண்ட்ரம் தாரயேத். பரமஹம்ஸோ லலாடே ப்ரணவேநைக மூர்த்வபுண்ட்ரம் வா தாரயேத். தத்வப்ரதீப ப்ரகாஶம் ஸ்வாத்மாநம் பஶ்யந்யோகீ மத்ஸாயுஜ்யமவாப்நோதி. அதவா ந்யஸ்த ஹ்ருதய புண்ட்ர மத்யே வா ஹ்ருதயகமல மத்யே வா "தஸ்ய மத்யே வஹ்நிஶிகா அணீயோர்த்வா வ்யவஸ்திதா நீலதோயத மத்யஸ்தா வித்யுல்லேகேவ பாஸ்வரா நீவாரஶூகவத்தந்வீ பரமாத்மா வ்யவஸ்தித:" இதி. அத: புண்ட்ரஸ்தம் ஹ்ருதய புண்டரீகேஷு தமப்யஸேத். க்ரமாதேவம் ஸ்வமாத்மாநம் பாவயேத். மாம் பரம் ஹரிம் ஏகாக்ர மநஸா யோ மாம் த்யாயதே. ஹரிமவ்யயம் ஹ்ருதய பங்கஜ ச ஸ்வாத்மாநம் ஸ முக்தோ நாத்ர ஸம்ஶய: மத்ரூப மவ்யயம் ப்ரஹ்ம ஆதிமத்யாந் ந வர்ஜிதம். ஸ்வப்ரபம் ஸச்சிதாநந்தம் பக்த்யா ஜாநாதி சாவ்யயம். ஏகோ விஷ்ணுரநேகேஷு ஜங்கமம் ஸ்தாவரேஷு ச".

"அநுஸ்யூதோவஸத்யாத்மா பூதேஷ்வஹ மவஸ்தித:. தைலம் திலேஷு காஷ்டேஷு வஹ்நி: க்ஷீரே க்ருதம் யதா. கந்த: புஷ்பேஷு பூதேஷு ததாத்மவஸ்தி தோஹ்யஹம். ப்ரஹ்மரந்த்ரே ப்ருவோர்மத்யே ஹ்ருதயே சித்ரவிம்ஹரிம். கோபீசந்தநமாலிப்ய தத்ர த்யா

த்வாப்நுயாத்பரம். ஊர்த்வுதண்டோர் த்வரேதாஶ்ச ஊர்த்வபுண்ட்ரோர்த்வ யோகவாந். ஊர்த்வம் பதம வாப்நோதி யதிரூர்த்வ சதுஷ்கவாந் . இத்யேதந் நிஶ்சிதம் ஜ்ஞாநம் மத் பக்த்யா ஸித்யதி ஸ்வயம். நித்ய மேகாக்ர பக்தி: ஸ்யாத் கோபீ சந்தந தாரணாத். ப்ராம்ஹணாநாந்து ஸர்வேஷாம் வைதிகாநாமநுத்தமம். கோபீ சந்தநவாரிப்யாம் ஊர்த்வபுண்ட்ரம் விதீய தே. கோபீசந்தநா பாவே துலஸீ மூலம் ச ம்ருத்திகாம். முமுக்ஷுர் தாரயேந்நித்யம் அபரோக்ஷாத்ம ஸித்தயே. அதிராத் ராக்நிஹோத்ர பஸ்மநா அக்நேர் பஸிதம் இதம் விஷ்ணுஸ்த்ரீணி பதேதி மந்த்ரேண வைஷ்ணவ காயத்ர்யா ப்ரணவே நோத்தூளநம் குர்யாத். ஏவம் விதிநா கோபீசந்தநம் ச தாரயேத் யஸ்த்வதீதே ஸ ஸர்வ பாதகேப்ய: பூதோ பவதி. பாப புத்திஸ்தஸ்ய ந ஜாயதே, ஸ ஸர்வேஷு தீர்த்தேஷு ஸ்நாதோ பவதி. ஸ ஸர்வைர்யஜ்ஞை: யாஜிதோ பவதி. ஸ ஸர்வைர்தேவை: பூஜ்யோ பவதி. ஸ்ரீமந் நாராயணே மய்யசஞ்சலா பக்திஶ்ச பவதி. ஸ ஸம்யக் ஜ்ஞாநம் ச லப்த்வா விஷ்ணுஸாயுஜ்யமவாப்நோதி. ந ச புநராவர்த்ததே ந ச புநரா வர்த்ததே ஸ:, இத்யாஹ பகவாந் வாஸுதேவ:. யஸ்த்வேத த்வாதீத ஸோப்யேவ மேவ பவதீதி ஓம் ஸத்யமித்யுப நிஷத், ஓம் ஆப்யாயந்த்விதி ஶாந்தி ".

## இதன் பதப்பொருள்

நாரதபகவான், ஸர்வேஶ்வரனான வாஸுதேவனை நமஸ்கரித்து "எனக்கு ஊர்த்வபுண்ட்ர விதியைச்சொல்ல வேணும். த்ரவ்யமென்ன? மந்த்ரமென்ன? தரிக்க வேண்டிய இடம் முதலானவை எவை?" என்று கேட்க வாஸுதேவன் சொல்லுகிறதாவது "வைகுண்டத்திலுண்டானதாய் எனக்கு ப்ரீதிகரமாய் என்னுடைய பக்தர்களாகிய ப்ரஹ்மாதி தேவர்களால் எனது ஶரீரத்தில் சந்தநம் போலே பூசப்பட்டபடியால் "விஷ்ணுசந்தநம்" என்று பெயர் பெற்றது. பிறகு கோபிகளினாலே எனது தேஹத்தில் நாள்தோறும் பூசப்பட்டு அலம்பப்பட்ட படியால் "கோபீ சந்தநம்" என்று பெயர் பெற்றது. அது பீத வர்ணம் அதாவது பொன்னிறம். முக்தி ஸாதநம். மோக்ஷத்தைக் கொடுக்கத்தக்கது. சக்ரதீர்த்தத்தி லிருப்பது. சக்ரங்களோடே கூடியது என்று சொல்லி, பிறகு கோபீ சந்தநத்தை நமஸ்கரித்து எடுத்து "வாராய் கோபீ சந்தநமே விஷ்ணுதேஹத்தில் நின்றும் உண்டானவனே! வெளுப்பு, மஞ்சள், சிவப்பு, கருப்பு, இந்த நிறங்களையுடைய மண்கள் விஷ்ணுவின் அவதாரமான வராஹபகவான் பூமியை ஸமுத்ரத்திலிருந்து எடுத்து மேலே ஸ்தாபித்து தனது திருமேனியை உதறினார். அப்போது சடை, மூக்கு, கால்

ரோமங்களிலிருந்து க்ரமமாக உண்டானதாய் மஹோபநிஷத்தி லும், மஹாநாராயணோப நிஷத்திலும், மஹாஸுதர்ஶநோபநிஷத்திலும், ஊர்த்வ-புண்ட்ரரோபநிஷத்திலும், ஶ்வேதம்ருத்தி கோபநிஷத்தி லும் சொல்லியிருக்கிறதை இங்கு சுருக்கமாய் "விஷ்ணு தேஹ ஸமுத்பவம்" என்று சொல்லிற்று. சக்ரத்தினால் அடையாளம் பண்ணப்பட்டவனே! உன்னை நமஸ்கரிக்கிறேன், ஸகல பாவங்களையும் போக்கடிப்பவனே ! உன்னை தரிப்பவனுக்கு மோக்ஷம் கொடுக்கக் கடவாய் என்று த்யானித்து "இமம் மே கங்கே" என்கிற மந்த்ரத்தி னாலே ஜலம்விட்டு "அதோ தேவா அவந்துந:, விஷ்ணோர்நுகம்" என்கிற மந்த்ரங்களாலே குழைத்து விஷ்ணு காயத்ரியினாலாவது கேஶவாதி நாமங்களினாலாவது தரித்துக்கொள்ளக் கடவன்.

ப்ரஹ்மசாரி, வாநப்ரஸ்தன், முகம்(நெற்றி) ஹ்ருதயம் (மார்பு) கண்டம் (கழுத்து) பாஹுமூலங் களில் (தோள்பட்டை) வைஷ்ணவ காயத்ரியினாலா வது, க்ருஷ்ணாதி நாமமங்களினாலாவது தரித்துக் கொள்ளக் கடவர்கள். "ஶங்க சக்ர கதாபாணே த்வாரகா நிலயாச்யுத கோவிந்த புண்டரீகாக்ஷ ரக்ஷமாம் ஶரணாகதம்" என்று த்யாநம் செய்து க்ருஹஸ்தன்

முகம் (நெற்றி) முதலாகிய (12) பன்னிரண்டு இடங்களில் பவித்ர விரலினால் வைஷ்ணவ காயத்ரியினாலாவது கேஶவாதி நாமங்களினாலாவது தரிக்கக் கடவன். ப்ரஹ்மசாரியாவது க்ருஹஸ்தனாவது நெற்றி, ஹ்ருதயம், கண்டம், பாஹு மூலங்களில் வைஷ்ணவ காயத்ரியினாலாவது க்ருஷ்ணாதி நாமங்களினாலாவது தரிக்கக்கடவன். ஸந்யாஸியானவன் "தர்ஜநீ" என்கிற ஆள்காட்டி விரலினால் முகம், ஹ்ருதயம் இவைகளில் ப்ரணவத்தினாலேயே தரிக்கக்கடவன். ப்ரஹ்மா முதலாகிய மூன்று மூர்த்திகளும், தேவதைகள் மூன்றும் வ்யாஹ்ருதிகள் மூன்றும், சந்தஸ்ஸுக்கள் மூன்றும், அக்நிகள் மூன்றும், இப்படிக்கு தேஜஸ்ஸை உடைய வஸ்துக்கள் மூன்று. காலங்கள் மூன்று. அவஸ்தைகள் மூன்று. ஆத்மாக்கள் மூன்று. புண்ட்ரங்கள் மூன்றும் ஊர்த்வ முகங்களாய் இருக்கின்றன "அ–உ–ம" என்கிற அக்ஷர ஸ்வரூபங்களாயிருக்கின்றன என்று சொல்லி, வைகுண்டமாகிய மேலுலகத்தைச் சேர்ப்பிக்கிற படியாலே, ஓங்காராதிகாரியானவன் ஊர்த்வ புண்ட்ரத்தையே தரிக்கக்கடவன். பரமஹம்ஸன் முகத்திலே (நெற்றியிலே) மாத்ரமாவது ப்ரணவத்தினால் ஒரே ஊர்த்வ புண்ட்ரத்தையாவது தரிக்கக்கடவன்.

(உண்ணும் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணனென்றேயிருக்கிற) உத்தமாதிகாரியான பரமஹம்ஸனுக்கும் கூட பாஹ்ய வைஷ்ணவத்தில் சேர்ந்த திருமண்காப்பு பன்னிரண்டிலும் நெற்றியில் மாத்ரமாவது ஒன்றையாவது ப்ரணவத்தினாலே அவஶ்யம் தரிக்க வேண்டியதென்று விதித்தபடியாலே மற்றவர்க்குப் பன்னிரண்டும் அவஶ்யமானதென்று ஸித்திக்கிறதன்றோ. "தத்வமாகிய விளக்காலே ப்ரகாசிக்கிற தனது ஆத்மாவைப்பார்க்கிற யோகியானவன் என்னுடைய ஸாயுஜ்யத்தை அடைகிறான்" அல்லது ஹ்ருதயத்தில் இடப்பட்ட (மார்பு) புண்ட்ரத்திலாவது "தஸ்ய மத்யே வஹ்நிஶிகா" என்கிற ப்ரமாணம் சொல்லுகிறபடி த்யாநிக்க கடவன். பரமாத்மா ஹ்ருதயகமலத்திலே அக்நி ஜ்வாலை போலே ஸூக்ஷ்மமாய் ஊர்த்வ முகமாய் இருக்கிறான். நீருண்ட மேகத்தின் நடுவிலே இருக்கிற அல்லது நீருண்ட மேகத்தைத் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கிற யாதொரு மின்னல்கொடியுண்டோ அதைப்போல் ப்ரகாஶமாயும், செந்நெல் தாந்யத்தினுடைய வால் போலே மிகவும் ஸூக்ஷ்மமான பரமாத்மா இருக்கிறானென்று முன் சொன்ன ஶ்ருதியின் அர்த்தத்தை த்யாநித்துக் கொண்டு அதையே

ஹ்ருதயபுண்ட்ரத்திலும் ஹ்ருதயகமலத்தி லும் த்யாநம் செய்து அப்படியே அப்யஸிக்கக்கடவன். அப்படியே பரமாத்மாவாகிய என்னையே ஏகாக்ர சித்தனாய் எவன் த்யாநிக்கிறானோ அவன் முக்தனாகிறான். எனது ரூபம் ஒரே விதமான ப்ரஹ்ம ரூபம், ஆதி மத்யாந்த ரஹிதமானது. ஸ்வயம் ப்ரகாஶமானது ஸச்சிதாநந்த ரூபம், அவ்யயம், அது பக்தி யினால் அறியத்தக்கது. விஷ்ணு ஒருவனே ஜங்கம ஸ்தாவர ரூபங்களான வஸ்துக்களில் பூர்ணமாய் வ்யாபித்திருக்கிறான். எள்ளினுள் எண்ணெய் போலவும், வஹ்நிக்கட்டையில் (அரணிக்கட்டை) அக்நி போலவும், புஷ்பங்களில் கந்தம் போலவும், பாலில் நெய் போலவும், ப்ராணிகளுக்குள் அந்தராத்மாவாயும் இருக்கிறான். பக்தன் ப்ரஹ்மரந்த்ரத்தில் புருவங் களின் நடுவில் ஹ்ருதயத்தில் ஜ்ஞாந ஸூர்யனாகிய ஹரிக்கு கோபீசந்தநம் ஸமர்ப்பித்து அங்கே த்யானம் செய்து மேலான பதத்தையடைவான். ஊர்த்வதண்டத்தையுடையவனாயும், ஊர்த்வரேதஸ்கனாயும், ஊர்த்வபுண்ட்ரத்தை தரித்தவனாயும், ஊர்த்வ யோகத்தை உடையவனாயுமுள்ள இந்த நாலு வித யோக்தையுடைய யதியானவன் ஊர்த்வ ஸ்தாநமாகிய வைகுண்டத்தையடைகிறான். இவ்வித ஜ்ஞாநமே நிஶ்சய ஜ்ஞாநம். இந்த ஜ்ஞாநம் என்னிடத்தில்

பக்தி செய்தால் தானே ஸித்திக்கும். நித்யமாய் கோபீ சந்தநத்தை தரிப்பதால் ஏகாக்ரமான பக்தியுண்டாகிறது. அதாவது, த்ருடமான பக்தி, வைதிகர்களாயிருக்கிற ஸகல ப்ராஹ்மணர்களுக்கும் உண்டாகும். மிகவும் உத்தமமான ஊர்த்வபுண்ட்ரமானது கோபீ சந்தநமென்ன, ஜலமென்ன, இந்த இரண்டினால் விதிக்கப்படுகிறது. கோபீசந்தநம் கிடைக்காவிடில், முமுக்ஷுவானவன் மோக்ஷ ஸித்திக்காக துளஸீ வேரின் மண்ணால் ஊர்த்வ புண்ட்ரம் தரிக்கக்கடவன். அதிராத்ராக்நிஹோத்ர பஸ்மத்தாலும் "அக்நேர் பஸிதம் இதம் விஷ்ணு: த்ரீணிபதா" என்கிற மந்த்ரங்களாலும், வைஷ்ணவ காயத்ரியாலும், ப்ரணவத்தாலும், உத்தூளநம் செய்து கொள்ளக்கடவன். கீழ்ச்சொன்ன விதியால் கோபீசந்தநத்தையும் தரிக்கக்கடவன். இந்த விதி க்ரமத்தைப் படித்தாலும் ஸகல பாதகங்களில் நின்றும் விடுபட்டுப் பரிஶுத்தனாகிறான். பாபபுத்தியுண்டாக மாட்டாது. அவன் ஸகல தீர்த்தங்களிலும் ஸ்நாநம் பண்ணினவ னாகிறான். ஸகல யாகங்களையும் பண்ணினவனாகிறான். அவன் ஸகல தேவர்களாலும் பூஜிக்கப்படுகிறான். அவனுக்கு ஸ்ரீமந் நாராயணனாகிய என்னிடத்தில் ஸ்திரமான பக்தியுண்டாகிறது. அவன் நல்ல ஜ்ஞாநத்தையுமடைந்து

விஷ்ணுஸாயுஜ்யத்தையும் அடைகிறான். திரும்பவும் வருகிறதில்லை. திரும்பவும் வருகிறதில்லை. இந்த இரண்டு உக்திகளும் திரும்பவும் வராமலிருப்பதின் உறுதியைக் காட்டுகிறது". இப்படியாகச்சொன்னான் பகவானான வாஸுதேவன். எவன் இதை அப்யஸிக்கிறானோ, அதாவது அத்யயநம் பண்ணுகிறானோ அவனும் இப்படிக்கே ஆகிறான். அதாவது பகவானுக்கே அடிமையாகிறான். இது ஸத்யம். இது வாஸுதேவோபநிஷத்தின் கருத்து. இதை நன்றாய் ஆராய்ந்து பார்த்தால் புண்டரத்தின் ஸ்வரூபம் நன்றாய் விளங்கும். அதாவது நாரத மாமுநிவர் த்ரவ்யம், மந்த்ரம், ஸ்தாநம் முதலானவுறுப்புகளுடனே ஊர்த்வபுண்ட்ர க்ரமத்தைச் சொல்ல வேணுமென்று கேட்டார்.

வ்யூஹ வைகுண்டஸ்தாநத்தில் உண்டான மண்ணை ப்ரஹ்மாதிகள் கொண்டு வந்து தன்னுடம்பில் சந்தநம் போல பூசினபடியாலே அதற்கு "விஷ்ணு சந்தநம்" என்று பெயருண்டாயிற்று. கோபி கா ஸ்த்ரீகள் நித்யமாய்த் தன்னுடம்பில் பூசி அலம்பின படியாலே பிறகு "கோபீ சந்தநம்" என்று சொல்லப்பட்டது. தன்னுடைய ஸம்பந்தத்தால் பரிஶுத்தமானது சக்ரத்தோடு கூடி சக்ர தீர்த்தத்திலிருக்கிறது. பீதவர்ணமானது அதாவது பசுமை நிறத்தையுடையது. இது மோக்ஷகாரணமாகிறது.

இதனால் மேற்படி மண்ணுக்கு "விஷ்ணு சந்தநம், கோபீ சந்தநம்" என்கிற பெயர்கள் வந்த வரலாறு கூறப்பட்டது. மஞ்சள் நிறமான இந்த மண் சந்தநம் போலவே பகவானுடைய திருமேனியில் உபயோகமானபடியால் சந்தந மென்னும் பெயர் பெற்று வழங்கி வருகிறது.

இதற்கு மேலே மந்த்ரங்களும், இடவேண்டிய இடங்களும், அதிகாரிகளும், இவையெல்லாவற்றை யும் அநேக ப்ரகாரமாய் விஶதமாய் சொல்லிக் கொண்டு போய் ப்ரஹ்மா முதலான மூன்று தேவதைகள், மூன்றுவ்யாஹ்ருதிகள், மூன்று சந்தஸ்ஸுகள், மூன்று அக்நிகள், மூன்று காலங்கள், மூன்று அவஸ் தைகள், மூன்று ஆத்மாக்கள் மூன்று புண்ட்ரங்கள், ஊர்த்வமுகங்களாக இருக்க வேணுமென்றும், அ—உ—ம இவை பீஜாக்ஷரங்கள் என்றும், இப்படிக்கு வ்யக்தமாய் எல்லாம் மூன்றாகச் சொல்லியிருப்பதாலும், இந்த புண்ட்ரத்தில் த்யாநிக்கச்சொன்ன மந்த்ரப்ரதிபாத்ய தேவதையைப்பார்த்தால் லக்ஷ்மீ தேவியாகிய மின்னல் கொடியோடு கூடிய காள மேகம் போன்ற பகவானாக முடிவதாலும், ||| இவ்வடிவான இடைவெளியுள்ள மூன்று ஊர்த்வரேகைகள் ஏற்படுமேயொழிய இடைவெளியில்லாத இவ்வித ஒரே ரேகை ஸித்திப்பதேயில்லை. ப்ரதிபக்ஷி, புண்ட்ரத்தில் ஒரு

இடைவெளி கூடாதென்றால் இரண்டு இடைவெளிகள் கிடைத்தனவே. இதற்கு நாமென்ன பண்ணலாம்? "பக்ஷ்யாபாயா ஹி மஞ்ஜூஷாம் த்ருஷ்ட்வாகு ஸ்தேந பக்ஷித:" என்றபடி மூடப்பட்டிருந்த பாம்பின் பெட்டியில் ஓர் எலி, பலஹார மிருப்பதாக எண்ணி அந்தப் பெட்டியைக் கடித்து உள்ளே புகவே உள்ளிருந்த பாம்பானது அந்த எலியைப்பிடித்து ஹதம் செய்து விட்டது, என்கிறது. மேற்படி ஸம்ஸ்க்ருத பழமொழி யின் கருத்து அந்த எலியின் கருத்து போல ப்ரதி பக்ஷிக்கு இஷ்டஸித்தியும் கெட்டு அநிஷ்டமும் கிடைத்தது என்பதாம்.

மேலும் "ப்ராஹ்மணானாம் து ஸர்வேஷாம் வைதிகாநாமநுத்தமம் கோபீ சந்தநவாரிப்யாம் ஊர்த்வபுண்ட்ரம் விதீயதே" என்கிறபடி கோபீ சந்தநத்தினாலும், ஜலத்தினாலும் ஊர்த்வபுண்ட்ரம் தரிப்பது ப்ராஹ்மணர்களுக்கு அநுத்தமம் (உத்தமமன்று) என்றும் சொல்லிற்று. இத்தால் வெளுத்த மண்ணே முமுக்ஷுவான வைதிக ப்ராஹ்மணனுக்கு முக்யமென்றும், அது கிடைக்காவிட்டால் மஞ்சள் மண்ணினால் தரிக்கலாமென்றும் இரண்டாவது பக்ஷமாயும், முமுக்ஷுக்களுக்கு ஶ்வேத ம்ருத்திகை தான் என்றும், மஞ்சள் நிறமான பீதம்ருத்திகை ஜ்ஞாநத்தை ஆசைப்பட்டவர்களுக்கும், ஐச்வர்யத்தை ஆசைப்பட்டவர்களுக்கும், என்று பாத்மோத்த ராதிகளில்

சொன்ன ப்ரமாணங்களின் அர்த்தம் ஸங்க்ரஹமாய் காட்டப்பட்டது.

ஸாமாந்யமாய் ஜாதியைப்பற்றி புண்ட்ரங் களைச் சொல்லுகிற ப்ரகரணங்களில் "ஊர்த்வ புண்ட்ரம் தரேத் விப்ரோ ம்ருதா ஶுப்ரேண வைதிக:" என்றும், "விப்ராணாம் ஊர்த்வபுண்ட்ரம் ஸ்யாத் திலகம் து மஹீப்ருதாம், பட்டாகாரம் து வைஶ்யா நாம், ஶூத்ராணாம் து த்ரிபுண்ட்ரகம்" என்று வைதிக ப்ராஹ்மணனுக்கு வெளுத்த மண்ணாலே ஊர்த்வ புண்ட்ரமே முக்யம், க்ஷத்ரியனுக்குத் திலகம், வைஶ்யர்களுக்கு சவுகம் (சதுரம்), ஶூத்ரனுக்கு திர்யக் புண்ட்ரம் என்று ஸாமாந்ய விதியினாலேயே ப்ராஹ்மணனுக்கு வெளுத்த மண்ணாலே ஊர்த்வபுண்ட்ரம் விதித்திருக்கிறது. அவர்களே முமுக்ஷுக்களாகில் வெளுத்த மண்ணால் ஊர்த்வபுண்ட்ரமே தரிக்க வேணும்.

"ஶ்யாமம் ஶாந்திகரம் ப்ரோக்தம் ரக்தம் வஶ்யகரம் ததா, ஶ்ரீகரம் பீதமித்யாஹு: ஶ்வேதம் மோக்ஷகரம் ஶுபம்" என்று ஶாந்தியைப் பண்ணுகிறது கறுத்தமண், வஶ்யத்தை பண்ணுகிறது சிவந்த மண், ஐஶ்வர்யத்தைக் கொடுக்கிறது மஞ்சள் மண், அல்லது "பீதம் ஜ்ஞாநப்ரதம்ப்ரோக்தம்" என்று ஜ்ஞாநத்தைக் கொடுக்கிறது மஞ்சள் மண், வெளுத்த மண்

மோக்ஷத்தைக் கொடுக்கிறது, இது தான் ஶாபமானது என்று சொன்னதில் ஐஹிகபலமாகிய ஐஶ்வர்யம் அல்லது ஜ்ஞாநம் இதுகளைகக் கொடுக்கிற மஞ்சள் மண், மோக்ஷப்ரதமான வெள்ளை மண்ணைக்காட்டில் அதமம். "கோபீ சந்தந வாரி ப்யாம்" என்று த்ருதீயா விபக்தியின் த்வி வசநத்தால் கோபீ சந்தநத்தாலும் ஜலத்தாலும் ஊர்த்வபுண்ட்ரம் தரிக்கலாமென்று ஏற்படுகிறது. "கோபீ சந்தநா பாவே துலஸீ மூல ம்ருத்திகாம் முமுக்ஷுர்தாரயேத்" என்னும் மேல் வாக்யத்தில் கோபீசந்தநம் கிடைக்கா விடில் துலஸீ வேரிலிருக்கிற ம்ருத்திகையினாலே ஊர்த்வ புண்ட்ரம் தரிக்கச்சொல்லி விதித்திருக்கிறது.

அதற்கு மேல் வாக்யமாகிய " அதிராத்ராக்நி ஹோத்ரபஸ்மோத்தூலநம் குர்யாத்" என்ற வாக்யத் தால் அக்நிஹோத்ர பஸ்மத்தினாலே உடம்பெல்லாம் தெளித்துக்கொள்ள வேண்டியது என்று விதித்திருக் கிறது.

இப்படிக்கு கோபீ சந்தநத்தை அநுத்தம மென்று சொல்லி பிறகு ஜலத்தைச்சொல்லி அநந்தரம் துலஸீ ம்ருத்திகையைச் சொல்லி அப்புறம் பஸ்மத்தையும் சொல்லிற்று. இத்தனை விஷயங்களையும் பாராமலோ, பார்த்து அறிந்து கொள்ள சக்தியற்றோ அல்லது

ஒளித்துவிட்டோ, தனக்கு வேண்டினதை மாத்ரமேயெடுத்துக்கொள்வது மநஸ் ஸாக்ஷியுள்ள ஒருவனுக்குத் தகுதியாமோ? அல்லது பலாப்பழத்தை மேலே மாத்ரம் பார்த்தவன் இந்த முள்ளையார் சாப்பிடுவார், பலாப்பழமெல்லாமுள்ளுதானென்று சொல்லுவது போலன்றோ இப்ரதிபக்ஷியின் செய்கையிருக்கிறது. புத்திமான்கள் அதே பழத்தை நன்றாய்ப் பார்த்து " ஸுதிர் போக்தா" என்கிறபடி அக்கனியை அநுபவிக் கிறார்கள். வாஸுதேவோபநிஷத் ஒன்றே ப்ரமாணமென்றும் மற்றது ப்ரமாணமாகாதென்றும் சொல்லுவதற்குத் தக்க ஹேதுக்கள் சொல்லமுடியாது. கீழ்ச் சொன்ன ந்யாயங்களால் கோபீசந்தநத்தாலாவது ஜலத்தாலாவது, துலஸீம்ருத்திகையாலாவது மூன்று ரேகைகளாய் இரண்டு இடைவெளியோடு கூடியே ஊர்த்வபுண்ட்ரம் தரிக்க வேணும், அல்லது பஸ்மத்தினாலே உடம்பெல்லாம் தெளித்துக்கொள்ள வேணும் என்று ஏற்படுகிறதே தவிர, இடைவெளியில்லாத புண்ட்ரம் கிடைப்பதில்லை. மேற்படி 108 உபநிஷத்துக்களில் அடங்கிய முக்திகோபநிஷத்தில் 810 ஆவது பக்கத்தில் 15 ஆவது வரியைப்பார்த்தால் ஸ்ரீராமனை ஹநுமான் நன்றாய் உபசரித்து "பரதத்வமாகிய உம்முடைய ஸ்வரூபத்தை உள்ளபடி அறிந்து மோக்ஷத்தையடைய வேணுமாய் இச்சிக்

கிறேன். ஶ்ரம மில்லாமல் பலத்தை அடைகிற உபாய மென்ன?" என்றுகேட்டார். அதற்கு ஸ்ரீராமன் மிகவும் க்ருபை செய்து சுருக்கமாய் கேட்க வேணுமென்று ஸங்க்ரஹமாய்ச் சொல்லுகிறார்.

"ரிக் வேதாதி விபாகேந வேதா: சத்வார ஈரிதா:" என்கிறபடி ரிக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம், அதர்வணவேதம் என்று நான்கு வேதங்கள் "ரிக்வேதஸ்ய து ஶாகா: ஸ்யு: ஏக விம்ஶதி ஸங்க்யயா" ரிக்வேதத்திற்கு 21 ஶாகைகள், "நவாதிக ஶதம் ஶாகா யஜுஷோ மாருதாத்மஜ", யஜுர் வேதத்தில் 109 ஶாகைகள், "ஸஹஸ்ரஸங்க்யயா ஜாதாஶ் ஶாகாஸ்ஸாம்ந: பரந்தப", ஸாம வேதத்தில் 1000 ஶாகைகள், "அதர்வணஸ்ய ஶாகாஸ்யு: பஞ்சாஶத் பேததோ ஹரே", அதர்வண வேதத்தில் 50 ஶாகைகள், ஆக மொத்தம் 1180 ஶாகைகள். "ஏகைக ஸ்யாஸ் து ஶாகாயா ஏகை கோபநிஷந்மத" ஒவ்வொரு ஶாகைக்கும் ஒவ்வொரு உபநிஷத்தாக மொத்தம் 1180 உபநிஷத்துக்களாகின்றன.

" சத்வார ஏவ வேதாஶ்ச அத்யேதவ்யா முமுக்ஷுபி:", என்று நான்கு வேதங்களையும் அத்யயனம் பண்ண வேண்டியது; அஶக்தனாகும் பக்ஷத்தில் 1180 உபநிஷத்துக்களை அதிகரிக்க வேணும்

என்றும், (அதே புஸ்தகத்தில் இருபதாவது வரிமுதல்) ஒரு ரிக்காவது பக்தியோடே படித்தால் ஸாயுஜ்யம் கிடைக்குமென்றும்; ராம நாம பஜநத்தாலும், காஶீ மரணத்தாலும், ஸாங்க்ய யோகத்தாலும் மோக்ஷம் கிடைக்கிறதென்றும் சொல்லிக்கொண்டு போய் "மாண்டூக்ய மேகமேவாலம் முமுக்ஷுணாம் விமுக்தயே" என்று மாண்டூக்ய உபநிஷத்து ஒன்றுமட்டுமே முமுக்ஷுக்களுக்கு போதுமானதென்றும் "ததாப்ய ஸித்தம் சேத் ஜ்ஞாநம் தஶோபநிஷதம் பட" மாண்டூக்யத்தினாலே ஜ்ஞாநம் உண்டாகாத பக்ஷத்தில் பத்து உபநிஷத்துகளைப் படிக்க வேணும் என்றும், "ததாபி த்ருடதா நோ சேத் விஜ்ஞாநஸ்ய அஞ்ஜநாஸுத, த்வாத்ரிம் ஶாக்யோபநிஷதம் ஸமப்யஸ்ய நிவர்த்தய" என்றும் தஶோபநிஷத்தினால் ஜ்ஞாநம் கிடைக்காவிட்டால் 32 உபநிஷத்துக்களைப் படிக்க வேணும் "விதேஹ முக்தா இச்சா சேத் அஷ்டோத் தரஶதம் பட" விதேஹ முக்தி வேணுமானால் 108 உபநிஷத்துகளைப் படிக்க வேணும் என்றும் சொல்லிற்று. அதிக அஶக்த பக்ஷம் ராம நாம பாடம்.

இது தவிர முக்திகோபநிஷத்தில் புண்ட்ரம் சொல்லவேயில்லை, மாண்டூக்யோபநிஷத்தில் புண்ட்ரத்தின்

ப்ரஸ்தாவமே கிடையாது. மாண்டுக்யோபநிஷத்தையே முக்யமாகக் கொள்ளும் பக்ஷத்தில் புண்ட்ரத்தைச் சொல்லாமையினால் முகத்தில் ஒன்றையும் தரிக்கக்கூடாததாய் வரும்.

"ஶ்ருதி ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா யஸ்தா **முல்லங்க்ய வர்த்ததே, ஆஜ்ஞாச்சேதீமம த்ரோஹீ மத்பக்தோऽபி ந வைஷ்ணவ:"** ஶ்ருதி ஸ்ம்ருதிகள் **என்னுடைய ஆஜ்ஞை, அந்த ஆஜ்ஞா ரூபங்களானவைகளை** எவன் அதிக்ரமிக்கிறானோ அவன் எனக்கு த்ரோஹியாகிறான். என்னுடைய ஆஜ்ஞயை மீறினவன் எவ்வளவு பக்தி செய்திருந்த போதிலும் அவன் வைஷ்ணவனே அன்று, என்கிற பகவத் வாக்யத்தை அநுஸரித்தே இருக்க வேண்டியது நமக்கு ஸ்வரூபமாகையாலே, ஶ்ருதி ஸ்ம்ருதீதிஹாஸ புராணாகமங்களையும் அவைகளை அநுஸரித்த ஶிஷ்டாசாரங்களையும் ப்ரமாணமாய் ஒத்துக்கொண்டு, அப்படிக்கே அநுஷ்டிக்கவேண்டியதே நமக்குக் கடமையாகையாலே, வேதங்கள் எப்படிக்கு ப்ரமாணமோ அதைவிட அதிக ப்ரமாணமென்று ஸ்ரீபாஞ்சராத்ர ஶாஸ்த்ரத்தை, வேதம் முதலான ஶாஸ்த்ரங்களிலேயே ப்ரமாணமாகச் சொல்லியிருக்கிறது. அதுகள் நிர்வாணோபநிஷத்திலும், ஶதபத ப்ராஹ்மணத்திலும்,

ஶேஷோபநிஷத்திலும், பாரதாதிகளிலும் ப்ரஸித்தமாயே இருக்கிறதுகள். ஆகம ப்ராமாண்யம், பாஞ்சராத்ரரக்ஷை முதலானதுகளிலும் காணலாம். இங்கு அந்த ப்ரமாணங்களை விஸ்தரபயத்தினால் நிறுத்தினேன்.

பாஞ்சராத்ரத்தில் சேர்ந்த 'பராஶர ஸம்ஹிதையில்' 2– ஆவது அத்யாயத்தில் 26– ஆவது **ஶ்லோகம் முதல், "ஸச்சித்ர மூர்த்வபுண்ட்ரஞ்சதாரயேத் ஶ்வேதம்ருத் ஸ்நயா, பார்ஶ்வே ஸாங்குல மாத்ரம் து மத்யே சித்ரம் ப்ரகல்பயேத்" "நாஸாதி கேஶ பர்யந்தம் ஊர்த்வ புண்ட்ரஸ்ய லக்ஷணம், ஊர்த்வ புண்ட்ரஸ்ய மத்யே** து ஹரித்ராசூர்ணமுத்தமம் லக்ஷ்மீ நிவாஸஸித்யர்த்தம் லலாடே தாரயேத் ஹரே: ஸச்சித்ரம் தாரயேத் ஸம்யக ஸுஶ்வேதம் கோபீசந்தநம்" 29 ஆவது ஶ்லோகம் முதல் பாதம் "அந்யதா தாரயேத் யோ வை ஸ யாதி நரகம் த்ருவம்" அதிக வெளுப்பான மண்ணினாலே நடுவில் இடைவெளியோடே கூடியதாய் ஊர்த்வபுண்ட்ரத்தை தரிக்கக்கடவன். இரு பக்கத்திலும் ஒன்றரை அங்குலத்துக்குக் குறைவில்லாமல் அகலத்தையுடைய ரேகைகளை இடவேணும். இடையில் இடைவெளி இருக்க வேணும். மூக்கின் ஆதி முதலாக கேஶம் வரைக்கும் ஊர்த்வ புண்ட்ரத்தின் லக்ஷணம். ஊர்த்வபுண்ட்ரத்தின் நடுவில் லக்ஷ்மீ வாஸம்

பண்ணுவதற்காக பகவானுக்கு ஸமர்ப்பித்ததாயும், அத்தாலேயே உத்தமமுமான ஸ்ரீசூர்ணத்தை ஊர்த்வபுண்ட்ரத்தின் இடையில் தரிக்கக்கடவன். இடைவெளியோடு கூடியதாயும் மிகவும் வெளுப்பாயும் நன்றாயும் தரிக்கக்கடவன். மேலானதாகச் சொல்லப்பட்ட வெளுத்த திருமண் கிடைக்காதபக்ஷத்தில் கோபீசந்தநமென்று சொல்லப்பட்ட பீத வர்ணமான மண்ணாலே முன்னே சொன்ன லக்ஷணத்தோடே கூடியதாய் புண்ட்ரத்தை தரிக்க வேண்டியது. முக்ய பக்ஷமான வெளுத்த மண்ணையும், இரண்டாவது பக்ஷமான மஞ்சள் நிற மண்ணையும் விட்டு வேறு வஸ்துக்களாலும் முன் சொன்ன மாதிரியை விட்டும், வேறே மாதிரியாக தரிப்பவன் நரகத்தையடைவன். இங்கே 'அந்யதா' என்கிற பதமானது மத்யமணிந்யாயத்தினாலே கோபீசந்தநமென்கிற பதத்தோடும் 'தாரயேத்' என்கிற பதத்தோடும் சேருகிறது. வெளுத்த மண் கிடைக்காத பக்ஷத்தில் கோபீசந்தனத்தோடே புண்ட்ர தாரணத்தை விதித்தும் 'தாரயேத்' என்கிறதோடே சேர்த்து வேறே ப்ரகாரமாய் தரிக்கக்கூடாதென்று நிஷேதித்தது. இதில் ஸுஶுவேதம் என்கிற பதம் வெளுத்த ம்ருத்திகைக்கு விஶேஷமானதே தவிர, கோபீசந்தனத்திற்கு விஶேஷணமாகக்கூடாது

ஏனென்றால் கோபீ சந்தநமானது பீத ம்ருத்திகையே தவிர ஶ்வேத ம்ருத்திகையன்று. ஶ்வேதமான கோபீம்ருத்திகையே அப்ரஸித்தமானது. "பீத வர்ணம் கோபீ சந்தநம்" என்று சொன்ன வாஸுதேவோபநிஷத்தோடும் "பீதம் ஜ்ஞாந ப்ரதம் ப்ரோக்தம், ஶ்வேத ம்ருத்திகாலாபே பீதம்ருத்திகா க்ராஹ்யா, பீதம் ஐஶ்வர்யதம் பவேத்" என்றும் சொல்லப்படுகிற மஹாநாராயணோபநிஷத், ஊர்த்வ புண்ட்ரோபநிஷத், பாத்மோத்தராதி ப்ரமாணங்களோடும் விரோதிக்கும். மிகவும் வெளுத்த மண்ணாலே தரிக்க வேண்டியது உத்தமபக்ஷம். இது கிடைக்காத பக்ஷத்தில் மஞ்சள் நிறமான மண்ணினாலே தரிக்கலாம். இந்த இரண்டு விதமான மண்கள் தவிர மற்ற வஸ்துக்கள் கூடா தென்று நிஷேதித்தது. மேலும் இதே ஸம்ஹிதையில் 3 ஆவது அத்யாயத்தில் 44 ஆவது ச்லோகம் முதல் ஊர்த்வபுண்ட்ரத்தை தரிக்க வேண்டிய ந்யாயங்களையெல்லாம் சொல்லிக் கொண்டு வந்து 48 ஆவது ச்லோகம், "பங்கீக்ருத்ய த்வயேநைவ ஶுத்தாம் து ஶ்வேத ம்ருத்திகாம், விஷ்ணோர்நுகேதி மந்த்ரேண கந்தத்வாரேதி மந்த்ரத:" , " ஸுதர்ஶநாநுஷ்டுபேந ந்ருஸிம்ஹைகாக்ஷரேணச, பூபீஜே நைவமாமந்த்ர்ய கோபிர் மந்த்ரம் ஹ்ருதிஸ்மரந்", "மோக்ஷ தர்மாதி

ஸித்யர்த்தம் விஷ்ணுஸாயுஜ்ய ஹேதவே, தர்ஜந்யா தத் க்ருஹீத்வாத லலாடே தாரயேத் த்விஜ:'', ''த்ருஷ்ட்வாஸு தர்ப்பணம் காம்ஸ்யம் கணம் தைவாக்ய மாநுஷம், ஊர்த்வபுண்ட்ரம் ருஜூம் ஸம்யக் ஹரிபாதாக்ருதிம் ஶுசி:'', ''நாஸாதௌ த்வ்யங்குலம் பாதம் மத்யம் ஸார்த்தாங்குலம் பவேத், பார்ஶ்வ மங்குல மாத்ரம் து ஸுஸ்பஷ்டம் தாரயேத் த்விஜ:'', ''விஷ்ணர்வர்ப்பிதம் ரக்தவர்ணம் ஹரித்ரா சூர்ண முத்தமம், லக்ஷ்மீநிவாஸ ஸித்த்யர்த்தம் தீபாகாரம் து ஸூக்ஷ்மகம்'', '' ஊர்த்வ புண்ட்ரஸ்ய மத்யே து லலாடே தாரயேத் த்விஜ:, ஓம் நம: கேஶ வாதிநா அர்த்தம் த்யாயந் சதுர்முக த்ருத்வா'', ''தாமோதராந்தம் வை ஶேஷம் து ஶிரஸி ந்யஸேத்''.

பரிசுத்தமாயும் வெளுத்துமிருக்கிற ம்ருத்தி கையை த்வயமந்த்ரத்தைச் சொல்லிக்கொண்டு குழைத்து, பிறகு ''விஷ்ணோர் நுகம்'' முதலான அநேக மந்த்ரங்களினாலே மந்த்ரித்து 'தர்ஜநீ' என்கிற ஆள்காட்டி விரலினாலேயெடுத்து நெற்றி முதலான 12 இடங்களில் தரித்து, மிச்சத்தைத் தலையில் தரிக்கவேணும். இந்த புண்ட்ரத்தை ருஜூவாயும், நன்றாயும், ஹரிபாதாகாரமாயும், பரிஶுத்த மாயும், மூக்கில் இரண்டு

நஷடவாஸு தாபபணம காமஸயம கணம தைவாக்ய
நுஷம், ஊர்த்வபுண்ட்ரம் ருஜும் ஸம்யக்
ரிபாதாக்ருதிம் ஶுசி:", "நாஸாதௌ த்வ்யங்குலம்
நம் மத்யம் ஸார்த்தாங்குலம் பவேத், பார்ஶ்வ மங்குல
த்ரம் து ஸுஸ்பஷ்டம் தாரயேத் த்விஜ:",
ிஷ்ணர்வர்ப்பிதம் ரக்தவர்ணம் ஹரித்ரா சூர்ண
ந்தமம், லக்ஷ்மீநிவாஸ ஸித்த்யர்த்தம் தீபாகாரம் து
ிக்ஷ்மகம்", " ஊர்த்வ புண்ட்ரஸ்ய மத்யே து லலாடே
ரயேத் த்விஜ:, ஓம் நம: கேஶ வாதிநா அர்த்தம் த்யாயந்
ர்முக த்ருத்வா", "தாமோதராந்தம் வை ஶேஷம் து
ரஸி ந்யஸேத்".

பரிசுத்தமாயும் வெளுத்துமிருக்கிற ம்ருத்தி கையை
வயமந்த்ரத்தைச் சொல்லிக்கொண்டு குழைத்து, பிறகு
பிஷ்ணோர் நுகம்" முதலான அநேக மந்த்ரங்களினாலே
ந்த்ரித்து 'தர்ஜநீ' என்கிற ஆள்காட்டி
ிரலினாலேயெடுத்து நெற்றி முதலான 12 இடங்களில்
ரிக்கு பிச்சக்கைக் கவையில் கரிக்கவேணும் இங்க

அங்குல நீளமுடையதாயும், நடுவில் ஒன்றரை அங்குலம், இடைவெளியும், இரண்டு பக்கங்களில் இருக்கிற ரேகைகள் ஒரு அங்குலம் அகலமுடையதாயும், மிகவும் ப்ரகாஶமாயும் தரித்துக்கொள்ளக் கடவன்.

"கூர்ச்சாதி கேஶபர்யந்தம் அந்தராளம் ப்ரகல்பயேத் கூர்சம் ஸ்த்ரீ ப்ருவோர் மத்யம்". கூர்சமென்று பெயரை உடைய புருவங்களினுடைய நடுமுதல் கொண்டு கேஶம் வரைக்கும் இடைவெளி விடச் சொன்ன பாத்மோத்தரபுராணத்தில் 224 ஆவது அத்யாயத்திலிருக்கிற ப்ரமாணப்படிக்கு ஏற்பட்ட இடத்தில், சிவந்த நிறத்தை உடையதாயும், விஷ்ணுவுக்கு ஸமர்ப்பிக்கப்பட்டதாயும், லக்ஷ்மிக்கு இஷ்டமாயும், லக்ஷ்மீவாஸம் செய்வதற்கு உசிதமாயும் இருக்கப்பட்ட சூர்ணத்தை புருவத்தின் நடு முதலாக கேஶம் வரைக்கும் தீபஜ்வாலைபோலே அடி பெருத்து நுனி சிறுத்ததாய் நெற்றியில் ஊர்த்வ புண்ட்ரத்தின் நடுவில் தரிக்கவேண்டியது. இப்படியே மற்ற பதினோரு ஊர்த்வபுண்ட்ரங்களின் நடுவிலும் தரிக்கக்கடவன். பாத்மோத்தர புராணத்தில் 224 ஆவது அத்யாயத்தில், "ஶ்யாமம் ஶாந்தி கரம் ப்ரோக்தம் ரக்தம் வஶ்யகரம் ததா ஸ்ரீகரம் பீதமித்யாஹு: ஶ்வேதம் மோக்ஷப்ரதம் ஶுபம்", கறுத்த மண் ஶாந்தியைச் செய்கிறது, சிவந்த மண்

வஶ்யத்தைச் செய்கிறது, மஞ்சள்நிறமான மண் ஐஶ்வர்யத்தைக் கொடுக்கிறது, வெளுத்தமண்ணானது மோக்ஷத்தைக் கொடுக்கிறது, இதுவே ஶாஸ்த்ரமானது என்றும், "ரக்தம் மோக்ஷப்ரதம் ப்ரோக்தம் பீதம் ஜ்ஞாநப்ரதம் பவேத், நீலம் தர்ம ப்ரதம் ப்ரோக்தம் ஶ்யாமம் காமப்ரதம் ததா", சிவந்த ஸ்ரீசூர்ணம் மோக்ஷத்தைக் கொடுக்கும், மஞ்சள் நிறமான ஸ்ரீசூர்ணம் ஜ்ஞாநத்தைக்கொடுக்கும், கறுத்த ஸ்ரீசூர்ணம் காமத்தைக் கொடுக்கும். "ஸ்ரீகரம் பீதமித் யேதத், முநிபி: கத்யதே புதை:" மஞ்சள் நிறமான சூர்ணம் ஐஶ்வர்யத்தைக் கொடுக்கிறதாக புத்திமான்களான ரிஷிகளால் சொல்லப்பட்டது, என்று ஹயக்ரீவ ஸம்ஹிதையிலேயும் இருப்பதினால் வெளுத்த மண்ணானது முமுக்ஷுவுக்கு எப்படி முக்யமானதாய் ஏற்பட்டதோ அப்படியே சிவந்த சூர்ணமும் முமுக்ஷுவுக்கு முக்ய மானதாய் ஏற்பட்டிருக்கிறது. ஸச்சரித்ர ரக்ஷாயாம் 44 ஆவது பக்கத்தில் பாரமேஷ்ட்ய ஸம்ஹிதா வசநம் ஶ்வேத ம்ருத்திகையை "அத பீதயா ஶ்யாமயாபி வா ஊர்த்வபுண்ட்ரம் த்விஜை: கார்யம் வைஷ்ண வைஶ்ச விஶேஷத:" வெளுத்த மண்ணாலேயே முக்யமாய் தரிக்க வேண்டியது. அல்லது மஞ்சள் மண், அல்லது கறுத்த மண் இது

ப்ராஹ்மணர்களுக்கு முக்யமானது. அதிலும் வைஷ்ணவர்களுக்கு விஶேஷமான குண்டின ரிஷிப்ரோக்தமான க்ருஷ்ணமந்த்ர கல்பத்தில், " ம்ருதைவ வைஷ்ணவ: குர்யாத் அபாவே சந்தநேந வா, ந பஸ்மநா கதாசிச்ச ஶ்வேதயைவ து ம்ருத்ஸ்நயா". என்று "வைஷ்ணவன் வெளுத்த மண்ணினாலேயே ஊர்த்வபுண்ட்ரத்தை தரித்துக்கொள்ளக்கடவன். அல்லது மஞ்சள் நிறமான மண்ணினாலே தரித்துக் கொள்ளக்கடவன். பஸ்மத்தினாலே ஒரு காலத்திலும் தரிக்கக்கூடாது. இன்னும் அநேக த்ரவ்யங்களாலே தரிக்கலாமென்றும் சொல்லி வெளுத்தமண்ணையே முக்யமானதாய் சொல்லி யிருக்கிறது".

அதாவது, "ஸௌபாக்யைஶ்வர்ய விஜ்ஞாநம் சந்தநம் ஸமுதாஹ்ருதம், ஆயுஷ்யமகரும் சாபி ஸ்ரீபத்ரம் ஶாந்திதம் ஸ்ம்ருதம்", "முக்திதா பஞ்ச ம்ருச் சைவ ஸ்ரீகரோ பில்வ ஏவ ச, ஸர்வகந்தாநி வஶ்யாநி புண்யாஶ வேதைவ ம்ருத்திகா".

நாரதஸம்ஹிதாயாம் 24ஆவது அத்யாயத்தில், "ஊர்த்வபுண்ட்ரம் ம்ருதா ஶுக்லம் யோ தத்தே நித்யமாத்மவாந், தஸ்ய ப்ரஸாதம் குருதே விஷ்ணுர் லோக நமஸ்க்ருத:". எவனொருவன் தினந்தோறும் வெளுத்த மண்ணினாலே ஊர்த்வபுண்ட்ரத்தை

தரிக்கிறானோ அவன் ப்ரஹ்ம ஜ்ஞாநியாகிறான். அவனிடத்தில் ஸ்ரீமந் நாராயணன் மிகவும் அநுக்ரஹம் செய்கிறான்.

ஸச்சரித்ர ரக்ஷையில் 54 ஆவது பக்கத்தில், " வர்த்தி தீபாக்ருதிம் சைவ வேணுபத்ராக்ருதிம் ததா,பத்மஸ்ய முகுளாகாரம் குமுதஸ்யோத்பலஸ்யச, மத்ஸ்ய கூர்மாக்ருதிம் சைவ *ஶ*ங்காகாரமதாபிவா, திந்த்ரிணீ பத்ரஸங்கா*ஶ*ம் தத்பத்ரஸத்ரு*ஶ*ம் ததா, ஊர்த்வபுண்ட்ரம் த்விஜ: குர்யாத் தண்டாகாரம் ஸு*ஶோ*பநம், ஏதத்ஸாமாந்யத: ப்ரோக்தம் வைஷ்ண வாநாம் வி*ஶே*ஷத:".

"ப்ரபந்நாநாம் து ஸர்வேஷாம் ஹரிபாதாக்ருதிர்வரா, ததைக *ஶே*ஷபூதாநாம் தார்யம் ஹரிபாதாக்ருதி:". வேணுபத்ராத்யாகாரங்களெல்லாம் ஸாமாந்ய வைஷ்ணவர்களுக்காகச் சொல்லப்பட்டது. நாரத ஸம்ஹிதையில் 69 ஆவது அத்யாயத்தில், "யம் த்ருஷ்ட்வா வைஷ்ணவ*ஶ்*சேதி நிஸ்ஸம்*ஶ*யமபூந் மநே, தாத்ரு*ஶ*ம் லக்ஷணம் வக்ஷ்யே வைஷ்ண வாநாம் வி*ஶே*ஷத:", பார்க்கும் போதே இவன் வைஷ்ணவனென்று எல்லாரும் தெரிந்து கொள்ளும்படியான அடையாளங்களைச் சொல்லுகிறேனென்று, ப்ரதிஜ்ஞை செய்து, நாரத மஹா முநிவர் பரக்கச் சொல்லியிருக்கிறார். தீபஜ்வாலாகாராதிகளைக் கழித்து விட்டு

ஹரிபாதாகாரத்தை முக்யமாகச் சொன்னார். அநந்யார்ஹஶேஷபூதனுக்கு முக்யமானதாய் சொன்ன ஹரிபாதாகாரமான புண்ட்ரமே, உத்தமமானதாய் கொள்ள வேண்டியது. ஏனென்றால் ஶ்ருதியில் எங்கு பார்த்தாலும் ஹரிபாதாகாரத்தையே விதித்திருக்கிற படியாலே, அதாவது "ஹரே: பாதாக்ருதிம் ஆத்மநோ ஹிதாய மத்யே சித்ரம் யோ தாரயதி ஸ: பரஸ்ய ப்ரியோ பவதி" நடுவில் இடைவெளியுடன் கூடியதாய் ஹரிபாதாகாரமான புண்ட்ரத்தை எவன் தரிக்கிறானோ அவன் பரமாத்மாவுக்கு இஷ்டனாகிறான் என்று மஹோபநிஷத்திலும், "மத்பாதாக்ருதயஶ்ச ஊர்த்வ புண்ட்ராநாஸாதய ஸ்ம்ருதா: ரேகாத்வா தஶகே நித்யம் தார்யம் மோக்ஷார்த்தி பிர்நரை: நாஸாதி கேஶாந்தம் தாரயேத், ப்ரதமம் து லலாடே, த்விதீயம் நாபௌ, த்ருதீயம் வக்ஷஸி, சதுர்த்தம் கண்டே, பஞ்சமம் நாபிதக்ஷிணே, ஷஷ்டம் தக்ஷிணபாஹௌ, ஸப்தமம் ததூர்த்வஸ்கந்தே, அஷ்டமம் நாப்யுத்தரே, நவமம் வாமபாஹௌ, தஶமம் ததூர்த்வஸ்கந்தே, ஏகாதஶம் ப்ருஷ் டோர்த்த:, த்வாதஶம் கண்ட ப்ருஷ்டே, தத்ப்ரக்ஷாளந தோயேந ஶிரஸி ப்ரோக்ஷ யேத். ஊர்த்வபுண்ட்ரம் ம்ருதைவ குர்யாத்". இது முதலாக

ஹரிபாதாகாரமானதாய் மூக்கு முதலாய் கேஶம் வரைக்கும் ஊர்த்வ புண்ட்ரத்தை தரிக்கக் கடவன். நெற்றியில் நாபிக்கு மேலேயும், மார்பில், கண்டத்தில், நாபிக்கு வலது புறத்தில், வலது கையில் மேல் பாகத்தில், வலது தோளில், நாபிக்கு இடப் புறத்தில், இடது கையில் மேல்புறத்தில், இடது தோளில், முதுகில் கீழ் புறத்தில், கழுத்துக்குப் பின்புறத்தில், கையை அலம்பின ஜலத்தினாலே தலையில் தெளித்துக் கொள்ள வேண்டியது என்று வராஹோபநிஷத்திலும், "நாஸா மூலாதி கேஶாந்தம் ஊர்த்வ புண்ட்ரம் விஷ்ணோ: ஸ்திதஸ்ய சரண த்வயாக்ருதிம். ஏகாங்குலம் புண்ட்ரதரோரஸ்ய மூலம். ததுத்பந்நே த்வேஶாகே. தத்ரைவ மத்யாவகா ஶோங்குலாத ந்யூந:. ஸ ஸ்ரீ ப்ரதிஷ்டாயை பவதி. ஸ்ரீர்ஹரித்ரா: யதோ ஹரிம் த்ராவயதி. தத் ஸ்ரீசூர்ணம் ஶ்ரியா விக்ருதிம் விஷ்ணுநா வா ஆதித்ய வர்ண: இதி ஶ்ரீபலே தாரயேத். தஜ்ஜலேந ஶ்ரீ பீஜேந ஸங்க்ருஷ்ய தத் ஸூக்ஷ்ம ரேகாம் காரயேத். ஸ்ரீமாந் பவதி தத்வேஶாகே ஹம்ஸவர்ணே, காயத்ரீ த்ரிஷ்டுப் சந்தஸ்கே, ஆத்ம பரமாத்மதைவத்யே, தர்ஶபூர்ணமாஸேஷ்டகே, இஷ்டாபூர்த்த க்ரியே, புக்தி முக்திபலே, ஸா ரேகா ஶ்ரீவர்ணா, காயத்ரீ சந்தஸ்கா, ஶ்ரீதைவத்யா, ஆநந்தக்ரியா, அம்ருத பலா, அயம் ஊர்த்வ புண்ட்ர விதி:

ஏவம் விதித்வா யோ யோ தாரயதி ஸ வைதிக: ஸர்வகர்மார்ஹோ பவதி, ஏதேந தேஜஸ்வீ ப்ரஹ்ம வர்சஸ்வீ பவதி, மத்யே சித்ரம் ஹரித்ராங்கிதம் அம்ருதமேவ ஶ்வேத ம்ருத்ஸ்நா பவதி, தயைவ தாரயேத்". " நாஸிகா மத்யபாகஸ்து நாஸா மூலம் ப்ரசக்ஷதே, ததாதிம் ஊர்த்வபுண்ட்ரம் து ஸச்சித்ரம் கேஶாந்தமாலிகேத், மத்பக்தஜந வாத்ஸல்யம் ஸ ச பூஜ்யோ யதாஹ் யஹம், அதோ தேவா அவந்து ந: யதோவிஷ்ணு: விசக்ரமே, த்ரேதா நிததே பதம் ஸமூடமஸ்யபாகும் ஸுரே, ய ஏவம் வேத இத்யுபநிஷத்".

நாரதோபநிஷத்தில், மூக்கில் நடுபாகமாகிய நாஸிகா மூலம் முதலாக கேஶம் வரைக்கும் விஷ்ணு வினுடைய இரண்டு திருவடிகளைப்போலவே தரிக்க வேண்டியது. புண்ட்ரமாகிற வ்ருக்ஷத்திற்கு ஒரு அங்குலம் மூலம் பீடம் இருக்க வேணும். புருவத்தினுடைய நடு முதலாய் கேஶம் வரைக்கும் நடுவில் ஒரு அங்குலத்திற்குக் குறையாமல் ஸ்ரீசூர்ணத்திற்காக இடைவெளி விடவேண்டியது. அதில் ஸ்ரீசூர்ணத்தை தரிக்க வேண்டியது. ஆத்ம பரமாத்மா தேவதைகள், புக்தி முக்திகள் பலம், ஸ்ரீசூர்ண ரேகைக்கு ஸ்ரீதேவ தை. காயத்ரீ சந்தஸ், ஆநந்த க்ரியா வ்யாபாரம். மோக்ஷம் பலம். இப்படிக்கு தரிப்பவனை பகவானைப்

போலவே பூஜிக்க வேண்டியது என்று நாரதோபநிஷத்திலும், "நாஸாதி கேச பர்யந்தம் ஊர்த்வபுண்ட்ரம் து தாரயேத்" என்று ஸுதர்ஶநோ பநிஷத்திலும், "ஊர்த்வபுண்ட்ர மாலிகேத் தஸ்மாத் த்விரேகம் பவதி, த்வே ரேகே ஸ்வயம்பூ: ப்ரம்ஹணஸ் ஸாயுஜ்யம் ஸ லோகதாம் யந்தி" என்று மஹா ஸுதர்ஶநோபநிஷத்தில் ப்ரதம கண்டத்திலும், "அம்ருதத்வம்ருச்சதி பாபம் ஹரதி விஷ்ண்வாகாரோ பவதி, ஸுதர்ஶநம் தார்ய இதிஹோர்த்வ புண்ட்ரம் த்விரேகம் வ்யக்தம் பவதி, ப்ரஹ்மணஸ் ஸாயுஜ்யம் ஸலோகதாம் கமயதி, விஷ்ணுர்வை ஸுதர்ஶநம், ய ஏவம் வேத", மஹா ஸுதர்ஶநோபநிஷத்தில் த்ருதீய கண்டத்திலும் "தப்தம் சக்ரே த்வி புஜே தார்ய இத்யூர்த்வ புண்ட்ர மாலிகேத், தஸ்மாத் த்விரேகம் பவதி", "புநராகமநம் ந யாதி" மஹா ஸுதர்ஶநோபநிஷத்தில் ஷஷ்ட கண்டத்திலும் இது வரைக்கும் ப்ரதமாத்யாய வசநங்கள் "தப்தம் சக்ரம் த்விபுஜே தார்ய இத்யூர்த்வ புண்ட்ரமாலிகேத் தஸ்மாத் த்விரேகம் பவதி, ந ச புநராவர்த்ததே, ந ச புநராவர்த்ததே, ப்ரஹ்மண: ஸாயுஜ்யம் ஸலோகதாம் கமயதி, ய ஏவம் வேத", மஹா ஸுதர்ஶநோபநிஷத்தில் த்விதீயாத்யாயத்தில் ப்ரதம கண்டத்தில், "ப்ராஹ்மணாவை தாரயந்தி ஊர்த்வ

புண்ட்ரம் த்விரேகம் பவதீதி மநோ ப்ரம்ஹண: ஸாயுஜ்யகும் ஸலோகதாம் ஜயதி, ய ஏவம் வேத" என்று த்ருதீய கண்டத்திலும்,

ஶுக்ல யஜுர்வேதத்தில், ஶதபத ப்ராஹ்மணத்தில், "தப்தம் சக்ரம் த்விபுஜே தார்ய இத்யூர்த்வ புண்ட்ரமாலிகேத், தஸ்மாத் த்விரேகம் பவதி" என்றும், யாஜுஷே கடஶாகையில், "த்ருதோர்த்வ புண்ட்ர: க்ருத சக்ரதாரீ விஷ்ணும் பரம் த்யாயதி யோ மஹாத்மாஸ்வரேண மந்த்ரேண ஸதாஹ்ருதி, ஸ்திதம் பராத்பரம் யந்மஹதோ மஹாந்தம், யத் விஷ்ணு க்ஷேத்ரம் தத்ர ம்ருத்ஸ்நாம் ஶ்வேதாம் உத்ருதாஸீத் யுத்தரேத், அம்ருதமேவ ஶ்வேத ம்ருத்ஸ்நாபவதி, தாம் ஶுத்த ஜலேந ப்ரணவேந கர்ஷயேத், தேவ பித்ரு கர்மாண்யாரபமாண: தயா நித்ய மூர்த்வபுண்ட்ரம் பிப்ருயாத், மந்த்ரை: கேஶவாதீநாம் தத்ரஹிதம் கர்மரக்ஷாகும்ஸி க்ருஹ்ணீயு: ததேவமப்யுக்தம் பவதி, நாஸாதி கேஶ பர்யந்தம் விஷ்ணோ: ஸ்திதஸ்ய சரணத்வயாக்ருதி ஏகாங்குலம் புண்ட்ரதரோரஸ்ய மூலம், ததுத்பந்நே த்வேஶாகே, ததைவ மத்யாவகா ஶோங்குலா தந்யூந:, ஸ ஶ்ரீப்ரதிஷ்டாயை பவதி, ஸ்ரீர்ஹரித்ரா யதோ ஹரிம் த்ராவயதி ஸ ஶ்ரீமான் பவதி, தத்வேஶாகே ஹம்ஸவர்ண காயத்ரீ த்ரிஷ்டுப் சந்தஸ்கே ஆத்மபரமாத்ம தைவத்யே,

ஶ்ரீ தத்வேஸா ஶ்ரீ ர் கவசம், காயத்ரீ சந்த:, ஆநந்த க்ரியா, அம்ருத தத்வ பலா அயமூர்த்வபுண்ட்ரவிதி:, ய ஏவம் விதி த்வா தாரயதி ஸ காயிகாத் பாதகாத் பூதோ பவதி ஸ விஷ்ணுஸாயுஜ்யமவாப்நோதி, ஸ விஷ்ணு ஸாயுஜ்ய மவாப்நோதி இதி. ய ஏவம் வேதேத்யுபநிஷத்''. நாஸிகா மூலம் முதல் கேஶம் வரைக்கும் விஷ்ணு வினுடைய இரண்டு பாதங்களைப்போல் ஊர்த்வ புண்ட்ரத்தை ஶுத்தமாயும் வெளுப்பாயு மிருக்கிற மண்ணினாலே தரிக்கக்கடவன். புண்ட்ரமாகிற வ்ருக்ஷத்துக்கு ஒரு அங்குலம் பீடம் இருக்க வேணும், அதையொட்டி ஊர்த்வமுகமாய் கேசம் வரைக்கும் இரண்டு கிளைகள் போல் இரண்டு ரேகைகளும், அதில் நடுவில் ஒரு அங்குலத்திற்குக் குறையாமல் ஸ்ரீசூர்ணம் தரிப்பதற்கு இடம் செய்ய வேணும். அந்த இடத்தில் ஸ்ரீசூர்ணத்தை தரிக்க வேணும். இப்படிச் செய்கிறவன் விஷ்ணு ஸாயுஜ்யத்தையடைகிறான் என்று காத்யாயநோபநிஷத்திலும் சொல்லியிருக்கிறபடியால், "ஏகாங்குலம் புண்ட்ரதரோரஸ்ய மூலம் ததுத்பந்நேத்வேஶாகே மத்யாவகாஶோங் குலாத ந்யூந: ஸ ஸ்ரீ ப்ரதிஷ்டாயை பவதி, ஶ்ரீ ஹரித்ரா ஹரிம் யதோ த்ராவயதி விஷ்ணோ: ஸ்திதஸ்ய த்வயாக்ருதி நாஸாதி கேசபர்யந்தம் ஊர்த்வ புண்ட்ரமாலிகேத், தஸ்ய மத்யே

வஹ்நி ஶிகா அணீ யோர்த்வா வ்யவஸ்தித:, நீல தோயத மத்யஸ்தா வித்யுல்லேகேவ பாஸ்வரா, ஸ பரஸ்ய ப்ரியோ பவதி ஓம் ஶாந்தி:, என்று மஹா நாராயணோப நிஷத்திலும் ஓதப்பட்டது.

பாத்மோத்தரபுராணத்தில் 224ஆவது அத்யாயத்தில், சிவப்பிரான், ஊர்த்வபுண்ட்ர மாஹாத்ம்யத்தில் சொல்வதாவது, "ஶுபதர்ஶநே, தாரணாதேவ ம்ருத்ஸ்நாயா: பவ பந்தாத் விமுச்யதே, ஊர்த்வ புண்ட்ரஸ்ய மத்யே து விஶாலே ஸுமநோஹரே, லக்ஷ்ம்யா ஸார்த்தம் ஸமாஸீநோ தேவதேவோ ஜநார்தந:, தஸ்மாத் யஸ்ய ஶரீரேது ஊர்த்வபுண்ட்ரம் த்ருதம் பவேத், தஸ்ய தேஹோ பகவதோ விமலம் மந்திரம் ஶுபம், தஸ்மாத்து ஸர்வதீர்த்தேஷு ஸர்வ யஜ்ஞேஷு தீக்ஷித:, தாரயேதுர்த்வபுண்ட்ரம் யோ வைஷ்ணவஶ் ஶுப்ரயா ம்ருதா, ஊர்த்வபுண்ட்ரதரோ விப்ர: ஸர்வ லோகேஷு பூஜித:, விமாநவரமாருஹ்ய யாதி விஷ்ணோ: பரம் பதம்".

"எவனொருவன் வெளுத்த மண்ணினாலே ஊர்த்வபுண்ட்ரத்தை தரித்துக்கொள்கிறானோ அவனுடைய தேஹம் ஶ்ரிய:பதியான நாராயண னுக்குக் கோயில் ஆகிறது. அவனுக்கு மோக்ஷம் பலம்"

“ஊர்த்வபுண்ட்ரதரம் விப்ரம் த்ருஷ்ட்வா பாபை: ப்ரமுச்யதே, நமஸ்க்ருத்வா தவா பக்த்யா ஸர்வதாநபலம் லபேத்”, ஊர்த்வபுண்ட்ரம் தரித்தவனை பக்தியோடே பார்த்தாலும், ஸேவித்தாலும் ஸகல பாபங்களும் நீங்கி ஸகல புண்யங்களும் உண்டாகும். என்றும், “ஊர்த்வபுண்ட்ரம் விப்ரம் யஶ்ஶ்ராத்தே போஜயிஷ்யதி, ஆகல்பகோடி பிதர: தஸ்ய த்ருப்தா ந ஸம்ஶய:”, “ஊர்த்வபுண்ட்ரதரோயஸ்து குர்யாத் ஶ்ராத்தம் வராநநே, கல்பகோடி ஸஹஸ்ராணி கயா ஶ்ராத்த பலம் லபேத்”, “எவனொருவன் ஊர்த்வ புண்ட்ரம் தரித்தவனை ஶ்ராத்தத்தில் போக்தாவாக வைத்து ஶ்ராத்தம் பண்ணுகிறானோ அவனுடைய பித்ருக்கள் அநேக கோடி கல்பங்கள் த்ருப்தியடைந்தவர்களாகிறார்கள். மேலும் அநேக கோடி கல்பங்கள் கயா ச்ராத்தம் பண்ணினால் என்ன பலமோ அந்த பலத்தையும் கர்த்தா அடைகிறான்.

“யஜ்ஞோதாநம் தபஶ்சர்யா ஜபஹோமார்ச்சநம் ச யத், ஊர்த்வபுண்ட்ரதர: குர்யாத் தஸ்ய புண்ய மநந்தகம், ஊர்த்வபுண்ட்ரவிஹீநஸ்து கிஞ்சித்கர்ம கரோதி ய:” “இஷ்டாபூர்த்தாதிகம் ஸர்வம் நிஷ்பலம் ஸ்யாந்ந ஸம்ஶய:, யச்சரீரம் மநுஷ்யாணாம் ஊர்த்வ புண்ட்ர விவர்ஜிதம்”, “த்ரஷ்டவ்யோ நைவதத்தேஹ: ஸ்மஶாந ஸத்ருஶோபவேத், ஊர்த்வபுண்ட்ர விஹீநஸ்து ஸந்த்யா

கர்மாதிகம் சரேத்'', "தத்ஸர்வம் ராக்ஷஸைர் நீதம் நரகம் சாதிகச்சதி'', "ஊர்த்வபுண்ட்ரம் தரேத் விப்ர: ம்ருதா ஶுப்ரேண வைதிக:, ந திர்யக்தாரயேத் வித்வாந் ஆபத்யபி கதாசந''.

ஊர்த்வபுண்ட்ரத்தைத்தரித்தவனுக்கு அநந்த புண்யங்களுண்டு. ஊர்த்வபுண்ட்ரமில்லாமல் பண்ணுகிற நித்ய நைமித்திகம் முதலான கர்மங்களை ராக்ஷஸர்கள் புஜிக்கிறார்கள். எவனுடைய ஶரீரத்தில் ஊர்த்வபுண்ட்ரங்களில்லையோ அவனுடைய தேஹம் ஸ்மஶாநத்திற்கு ஸமாநமாகையாலே அவ னை பார்க்கக் கூடாதென்றும், மிகவும் வெளுத்த மண்ணினாலேயே ஊர்த்வபுண்ட்ரத்தையே தரிக்கக்கடவன். எப்படிப்பட்ட ஆபத்துக்கள் வந்தாலும் திர்யக் புண்ட்ரத்தை தரிக்கக்கூடாதென்றும் சொல்லப்பட்டது.

"ஏகாந்திநா மஹாபாகா: ஸர்வபூதஹிதேரதா:, ஸாந்தராளம் ப்ரகுர்வீரந் புண்ட்ரம் ஹரிபதாக்ருதி, ஹரே: பாதாக்ருதிம் தார்யம் ஊர்த்வபுண்ட்ரம் மநோ ஹரம், மத்யே சித்ரேண ஸம்யுக்தம் தத்திவை மந்திரம் ஹரே:'', "ஊர்த்வபுண்ட்ரம் ருஜுூம் ஸௌம்யம் ஸுபார்ஶ்வம் மநோஹரம், தண்டாகாரம் ஸுஶோபாட்யம் மத்யே சித்ரம் ப்ரகல்பயேத்'' என்றும், "ஊர்த்வபுண்ட்ரஸ்ய மத்யே து விஶாலே ஸுமநோ ஹரே, ஸாந்தராலே ஸமாஸீநா ஹரிஸ்தத்ர

ஶ்ரியா ஸஹ", "நிரந்தராளம் ய: குருதே ஊர்த்வ புண்ட்ரம் த்விஜாதம:, ஸ ஹி தத்ர ஸ்திதம் விஷ்ணும் ஶ்ரியம் சைவ வ்யபோஹதி, அச்சித்ர மூர்த்வபுண்ட்ரந்து யே குர்வந்தி த்விஜா நரா : (அதமா), தேஷாம் லலாடே ஸததம் ஶுந: பாதோ ந ஸம்ஶய:", "தஸ்மாத் சித்ராந் விதம் புண்ட்ரம் ஸஹரித்ரம் ஶுபாஶ்ரயம் தாரயேத் ப்ராஹ்மணோ நித்யம் ஸாலோக்ய ஸித்தயே" என்றும், "ஆரப்ய நாஸிகா மூலம் லலாடாந்தம் லிகேந் ம்ருதா, ஸமாரப்ய ப்ருவோர்மத்யம் அந்தராளம் ப்ரகல்பயேத்", என்றும் "அந்தராளம் த்வயங்குலம் ஸ்யாத் பார்ஶ்வ மங்குலமாத்ரகம், ம்ருதா ஶுப்ரேண விலிகேத் புண்ட்ரம் ம்ருதுதரம் ஶுபம்", என்றும் சொல்லப்பட்டது.

அதாவது, ஸத்குலத்திலுண்டான ப்ராஹ்மண னுக்கு ஊர்த்வபுண்ட்ரம் தவிர மற்ற புண்ட்ரங்கள் கூடாதென்றும், ஏகாந்திகளுக்கு நடுவில் இடை வெளியோடு கூடிய ஹரிபாதாகாரமான ஊர்த்வ புண்ட்ரமே தரிக்கத்தக்கதென்றும், இந்த ஸச்சித்ர மான ஊர்த்வ புண்ட்ரத்தில் தான் பிராட்டியுடன் கூடிய நாராயணன் இருக்கிறான், இது தான் பகவா னுக்கு ஸந்நிதியென்றும், இடைவெளியில்லாத அச்சித்ர மான ஊர்த்வபுண்ட்ரத்தை தரித்தால் அங்கே ஹரிபாதம் கிடையாது, ஶுந: பாதமிருக்கிறதாயும், பிராட்டியுடன்

இருக்கிற ஹரியைத்துறத்தி விடுகிறதாயும் இருப்பதால் இடைவெளியுடன் கூடிய தாகவே தரிக்க வேண்டியது. இவனுக்குத்தான் ஹரி ஸாலோக்ய ஸித்தியுண்டென்றும், நாஸிகா மூலம் முதலாக கேஶம் வரைக்கும் தரிக்க வேணுமென்றும், புருவத்தினிடை முதலாக கேசம் வரைக்கும் இரண்டங்குலம் அகலமுடைய இடைவெளியும், இரண்டு பக்கத்திலும் ஒரு அங்குலம் அகலமுடைய ரேகைகளிருக்க வேணுமென்றும், வெளுத்த மண்ணா லேயே இடவேண்டிய தென்றும், நெற்றி முதலான பன்னிரண்டு இடங்களில் கேஶவாதி த்வாதஶோர்த்வ புண்ட்ரங்களும், அந்த பன்னிரண்டு புண்ட்ரங்களின் நடுவில் ஸ்ரீதேவி முதலான பன்னிரண்டு பிராட்டியின் திருநாமத்தாலே ஸ்ரீசூர்ணங்களையும் தரித்துக்கொள்ள வேண்டும் என்று பொருள்.

"தத்ப்ரக்ஷாலந தோயேந வாஸுதேவேதி மூர்த்தநி, ப்ரோக்ஷயேத் மோக்ஷ ஸித்யர்த்தம் அபரோ க்ஷாத்ம ஸித்தயே", அதாவது, கையை அலம்பின ஜலத்தினாலே வாஸுதேவ மந்த்ரத்தைச்சொல்லித் தலையில் ப்ரோக்ஷித்துக் கொள்ளவேண்டியதென்றும் சொல்லிற்று.

"லலாடே ஹம்ஸயுக்மே ச ப்ருஷ்டயோ: கண்ட கூபரே, தாரயேத் ஊர்த்வபுண்ட்ராணி சதுரங்குல

மாயதம்'', "குக்ஷௌ தத்பார்ஶ்வயோ: ப்ரோக்தம் ஆயதம் து தஶாங்குலம், பாஹ்வோ: வக்ஷஸ்தலே புண்ட்ரம் அஷ்டாங்குலமுதாஹ்ருதம்'', "ஏவம் த்வா தஶ புண்ட்ராணி ப்ராஹ்மணஸ்ஸததம் தரேத், அந்தராலேஷு ஸர்வேஷு ஹரித்ராம் தாரயேதஶ்ரியம்'', "தத்தத் புண்ட்ரேஷு தந்மூர்த்திம் த்யாத்வா மந்த்ரேண தாரயேத்'' என்று சொல்லப்பட்டது.

அதாவது, நெற்றியிலும் இரண்டு தோள்களிலும் கண்டத்திலும் பிடரியிலும், முதுகின் கீழ் புறத்திலும் நான்கு அங்குல நீளமும், இரண்டு கை களிலும் (தோள்களிலும்) மார்பிலும் எட்டு அங்குல நீளமும், வயிற்றில் மூன்றும் பத்து அங்குல நீளமுமாய் தரிக்க வேணுமென்றும், பன்னிரண்டு திருமண் காப்புகளிலும் ஸ்ரீசூர்ணங்களையும் தரித்துக் கொண் டு கேஶவாதி த்வாதஶ மந்த்ரங்களாலும், ஸ்ரீதேவி முதலான த்வாதஶ மந்த்ரங்களினாலும், பன்னி ரண்டு தேவிகளோடு கூடிய பன்னிரண்டு பகவந் மூர்த்திகளையும் பன்னிரண்டு ஊர்த்வ புண்ட்ரங் களிலும் த்யாநிக்க வேண்டியதென்றும், ம்ருத்திகை களைக்கொண்டு வர வேண்டிய இடம் முதலானது களையும் இன்னும் அநேக விஷயங்களையும் சிவன் பார்வதிக்குச் சொல்லுகிற ப்ரகரணத்தில் பரக்கக் காணலாம்.

"அம்போஜமுகுலாகாரம் பீடமேகாங்குலம் ந்யஸேத்" அதாவது, தாமரை மொக்கைப்போலே ஒரு அங்குலம் பீடம் வைக்க வேணும், என்று பொருள்.

"ததா குக்ஷ்யாதி காங்கேஷு பீடம் து சதுரஸ்ரகம்" வயிறு முதலான இடங்களில் பீடத்தைச் சவுக்கமாயிட வேணுமென்று ஹயக்ரீவ ஸம்ஹிதையில் சொல்லப்பட்டது.

"நாஸாதௌ த்வ்யங்குலம் பாதம்", மூக்கில் இரண்டு அங்குலம் பாதம் தரிக்க வேணுமென்று, பராஶர ஸம்ஹிதையில் சொல்லப்பட்டது.

" ஏகாங்குலம் புண்ட்ரோ: அஸ்ய மூலம்" ஒரு அங்குலம் பீடம் வைக்க வேணுமென்று வராஹோபநிஷத்தில் சொல்லப்பட்டது.

"கிஞ்சித் புல்லாம்புஜாகாரம் பீடம் ஏகாங்குலம் ந்யஸேத்", பாதி விகஸித்த தாமரை புஷ்பம் போல பீடம் ஒரு அங்குலம் வைக்க வேணு மென்றும் சொன்ன வசநார்த்தங்களை நன்றாக ஆலோசித்தால் ஸாமாந்ய விஶேஷ பேதமில்லாததினாலே ஒரு அங்குலத்திற்குக் குறைவில்லாமலும் இரண்டு அங் குலத்திற்கு அதிகமில்லாமலும் நாஸிகா மூலத்தில் பீடத்தை தரிக்க வேண்டியதென்றும் ஸித்தமாகிறது.

ஸச்சரித்ர ரக்ஷாயாம் 51ஆவது பக்கத்தில் பாரமேஷ்ட்ய ஸம்ஹிதா வசநம், " அநாமிகா காமதாஸ் யாத் முக்திதாப்ரதேஶிநீ கநிஷ்டாயுஷ்யதா ப்ரோக்தா அங்குஷ்டம் புஷ்டிதம் பவேத், நிஷித்தா மத்யா ப்ரோக்தாச ஊர்த்வபுண்ட்ரவிதௌமுநே தக்ஷிணஸ்ய து ஹஸ்தஸ்ய அங்குல்யஸ் ஸம்ப்ரகீர்த்திதா" அதாவது, அநாமிகை காமத்தையும், ஆள்காட்டி விரல் மோக்ஷத்தையும், சுண்டுவிரல் ஆயுஸ்ஸையும், கட்டை விரல் புஷ்டியையும் தருகிறதாயும், வலக்கையாலே இட வேணுமென்றும், நடுவிரலாலே இடக் கூடாதென்றும் சொல்லியிருக்கிறது.

இந்த ப்ரமாணங்களை நன்றாய் பக்ஷபாதத்தை விட்டு மத்யஸ்த புத்தியினாலே பார்த்தால் நாஸிகா மூலம் முதல் கொண்டு புருவத்தினிடை வரைக்கும் இரண்டு அங்குலத்திற்கு அதிகப்படாமல் ஒரு அங்குலத்திற்குக் குறையாமலும் பாதி மலர்ந்த தாமரைபூப் போன்ற பீடமும் அதையொட்டியே ஊர்த்வமுகமாய் கேஶம் வரைக்கும் மேல் நோக்கிய ரேகைகள் ஒரு அங்குலம் அகலமுடையதாயும், புருவத்தினுடைய நடு முதலாக கேஶம் வரைக்கும் இரண்டுவிரற்கிடை அகலத்திற்கு அதிகப்பட்ட தாயும், ஒரு அங்குலத்திற்குக் குறையாமலுள்ள அகலத்தையுடைத்தான இடை

வெளியும், அந்த இடைவெளியில் தீபஜ்வாலை போலே தரிக்கப் பட்ட சிவந்த ஸ்ரீசூர்ணரேகையுமாய்க் கூடிய திருமண்காப்பு ஸுப்ரஸித்தமாய் ஏற்படுகிறது. இது உத்தமாதிகாரிகளான ஏகாந்தீ(பரமைகாந்தீ) அதாவது பகவானையே உபாயோபேயமாயும் லக்ஷ்மியை புருஷகாரமாயும் கொண்டு ஸாதநாந்தர ப்ரயோஜநாந்தரங்களை ஸவாஸநமாய்விட்டு "உனக்கே நாம் ஆட்செய்வோம் மற்றை நம் காமங்கள் மாற்று" என்றும் இருக்கப்பட்ட ஏகாந்திக்கும், பாகவதர்களைப் புருஷகாரமாயும் ஆசார்யனையே உபாயோபேயமாகவும் கொண்டு "நாவகாரியம் சொல்லிலாதவர்" என்கிற பாசுர அர்த்தப்படிக்கும் " *ஶ*த்ருக்நோ நித்ய *ஶ*த்ருக்ந: பரதேந ததா அநக:" என்கிற ப்ரமாணப் படிக்கும் ப்ரதம பர்வ ஸம்பந்தலே*ஶ*முமில்லாமல் இருக்கிற பரமைகாந்திகளுக்கும் இது முக்யமான ஊர்த்வபுண்ட்ரமென்றும் ஸித்தாந்தம்.

ஸச்சரித்ர ரக்ஷையில் வேணுபத்ராத்யாகாராந்தரங்களை ஸாமாந்ய வைஷ்ணவனுக்கென்றும், ஹரிபாதாகாரமே அநந்யார்ஹ *ஶே*ஷத்வ ஜ்ஞாநமுடையவனுக்கு என்றும் வேதாந்தாசார்யரும் ஸித்தாந்தம் செய்திருக்கிறார்.

அஶாஸ்த்ரீயமாய் இடைவெளியற்ற புண்ட்ரத்தை தரித்துக்கொண்டு லக்ஷ்மியுடன் கூடியிருந்த நாராயணனைத் துறத்தியும், அவனது கோயிலை நாஶம் பண்ணியும், ஹரிபாதத்தையும் நீக்கி, க்ராம ஸிம்ஹத்தினுடைய ஶ்வாநபாதத்தை தரிப்பவர்களுக்கு மோக்ஷம் கிடைக்குமா? அல்லது நரகம் கிடைக்குமா? அல்லது ஶாஸ்த்ரத்தில் சொன்ன ப்ரகாரமாய் இடைவெளியோடு கூடியதாயும் ஸலக்ஷணமுமாயும் தரித்துக்கொண்டு, லக்ஷ்மீ நாராயணனுக்கு நித்ய வாஸம் பண்ணத்தக்கதான ஸந்நிதியையும் கட்டி வைத்து, அவர்களையும் ப்ரதிஷ்டை செய்து ஹரி பாதத்தையும் ஆவாஹநம் பண்ணி, அநந்யார்ஹ ஶேஷத்வ ஸ்வரூபத்திற்கு அஸாதாரண சிஹ்நமான தீபாகாரமான சிவந்த ஸ்ரீசூர்ணத்தோடு கூடிய மிகவும் வெளுத்தமண்ணினாலே ஹரிபாத த்வயாகாரமான ஊர்த்வபுண்ட்ரத்தை தரித்துக் கொண்டிருப்பவருக்கு நரகம் கிடைக்குமா? மோக்ஷம் கிடைக்குமா? பண்டித ரத்நங்களே! யோசித்துப் பாருங்கள்.

ஊர்த்வபுண்ட்ரத்திற்கு ம்ருத்திகையை வெளுப்பாகவும் சொல்லி, ஸ்ரீசூர்ணத்தை ஆதித்யவர்ணா,

ஸ்ரீவர்ணா என்றும் உபநிஷத்துக்களில் சொல்லி யிருப்பதனாலே அதுக்கு விவரணமான ப்ரமாணங் களையும் சுருக்கமாய் காட்ட வேணும். அதாவது ககேஶ்வர ஸம்ஹிதையில் 40 ஆவது அத்யாயத்தில்,

வைநதேய உவாச, “ஸ்ரீசூர்ணம் கீத்ருஶம்தேவ கிம் த்ரவ்யம் வத மே ப்ரபோ”,

பகவான் உவாச, “ஶ்ருணு தார்க்ஷ்ய மஹாபா ஹோ யந்மாம் த்வாம் பரிப்ருச்சஸி, தத்ப்ரவக்ஷ்யாமி தே சூர்ணம் வைஷ்ணவாநாம் ஹிதாவஹம் பால்குநே மாஸி ஸம்ப்ராப்தே ஏகாதஶ்யாம் ஸமாஹித: ஶுத்தாம் ஹரித்ராமாதாய க்ரிமி கீட விவர்ஜிதாம் ஸுவர்ணாம் ஸுத்ருடாம் ஶ்லக்ஷ்ணாம், ரக்தாம் , அதிமநோ ஹராம், தத் கண்டஶஶ்ச குர்வீத க்ருஷ்ண கர்ப்பாம் பரித்யஜேத், துலஸீம் ப்ரார்த்ய ஸஞ் சூர்ண்ய தலாந் ஸம்ஶோதயேத் ஸுதீ:, மூலமந்த்ரேண சாத்ருத்ய, சாயா ஶோஷேண ஶோஷயேத் ஸ்ரீகந்தம் சாகரும் சைவ கர்ப்பூரம் ச விநிக்ஷிபேத் , காஶ்மீரம் ச ஸகஸ்தூரிம் ஸ்வர்ண சூர்ண விமஶ்ரிதம், அவஹ ந்யாத் ப்ரயத்நேந பூமௌ அபதிதம் யதா, ஸ்ரீவைஷ் ணவை: வேதவித்பி:, மந்த்ரஜ்ஞை: ஸமுபஸ்திதை:, ஸஞ் சூர்ணயித்வா ஸுத்ருடம் நவபாண்டே ஸுதூபிதே, ஸம் ஸ்தாப்ய புஷ்பை: ஸம்வாஸ்ய அதிவாஸ்ய பவித்ரவத், பவித்ராரோப

மார்கேண ஸம்யக் ஸம்மந்த்ரயேத் ஶதை:,
பௌருஷேணைவஸூக்தேந ஶ்ரீஸூக்தேந விதாநத:,
பூஸூக்தேந பவித்ரேண த்வாதஶாக்ஷர வித்யயா
ஶ்ரீமதஷ்டாக்ஷரேணாபி ஷட்வர்ணேந ததாபுந:,
அபிமந்த்ர்ய ச ஸம்பூஜ்ய ஸ்தாபயேத் விஷ்ணு மந்திரே.

ஹரிம் விதிவத் அப்யர்ச்ய ஜாகரம் காரயேத் ஸுதீ:
தத: ப்ரபாதஸமயேஸ்நாத்வா ஶுக்லாம்பரஶ் ஶுசி:,
ஹரிம் ஸம்பூஜ்ய விதிவத் நைவேத்யாந்தம் யதாவிதி,
மூலமந்த்ரம் அநுஸ்ம்ருத்ய தேவ்யை தேவாய பக்தித:,
சூர்ணம் பதத்வயே தத்வா மிதோ மந்த்ரேண தேஶிக:
ததோ ஹ்ருதயதேஶே து தரிதா
தத்யாத்ஸமந்த்ரத:,ததஸ்ஸூக்தைஶ்ச மந்த்ரைஶ்ச
தேவம் மூர்த்நி அபிஷேசயேத்.

ஆசார்யோ யஜமாநஶ்ச வைஷ்ணவை: மந்த்ர பாடகை:,
அபிஷிச்ய ததோ தேவம் புநஸ்ஸம்பூஜ்ய பக்தித:,
மஹாஹவிர்நிவேத்யாத பக்ஷ்யை: நாநா விதைரபி,
நீராஜநம் ஸமர்ப்யாத புஷ்பாஞ்ஜலிமத க்ஷிபேத்,
ஶ்ரீமந்நாராயணஸ்வாமிந் க்ருஹாண ப்ரியயா ஸஹ,
தாரண்யாச ஹ்ருஷீகேச சூர்ணம் திவ்யம் மயாக்ருதம்,
ஶ்ரீவத்ஸம் கௌஸ்துபம் தேவ தாரிதம் ஸததம் விபோ,
தத்வத் சூர்ணம் மயா தத்தம் க்ருஹாண புருஷோத்தம,
இதி ஸம்ப்ரார்த்ய தேவேசம் பக்தியுக்தேந சேதஸா,
தத்யாத்ஆசார்ய வர்யாய தக்ஷிணாம் ஸுஸமாஹித,

தத்ராகதாந் மஹாபாகாந் வைஷ்ணவாந் பூஜயேத்தத:, ப்ராஹ்மணாநபி ஸம்பூஜ்ய தக்ஷிணா விடிகாதிபி:. தாம்பூலம்.

தேவஸ்ய காத்ரே தச்சூர்ணம் தத்திநே ஸ்தாபயேத் ஸுதீ:, ப்ரபாதே தேவமப்யர்ச்ய சூர்ணம் ஸங்க்ருஹ்ய பாத்ரகே, தத்யாதாசார்ய முக்யேப்யோ சூர்ணம் ஸர்வ பலப்ரதம், விஷ்ணர்வர்ப்பிதம் ரக்தவர்ணம் நிஶாயா (மஞ்சள்) சூர்ணமுத்தமம். லக்ஷ்ம்யாஸ்து ப்ரீதயே நித்யம் தீபவத்தாரயேத்புத:, ப்ருவோ: மத்யாத் ஸமாரப்ய கேசாந்தம் விலிகேத் ஸுதீ:, விலோக்ய தர்ப் பணம் தீப ஶிகாவத் தாரயேத் ஸதா. கந்யா பர்த்ரும தீவாபி விதவா வா ககேஶ்வர, ஶ்ரீசூர்ணம் தாரயேத் நித்யம் மம ஸாயுஜ்யகாரணாத். கந்யா கூஷ்மாண்ட பீஜம் து மங்கலீ வேணுபத்ரவத் விதவா தில பீஜம் து ஏவம் ஸந்தாரயேத் ஸதா, இதி ஸம்யக் மயாக்யாத: சூர்ணஸ்ய விதிருத்தம:. ககாதிப பரம் தர்மம் கிமந் யத் ஶ்ரோதுமிச்சஸி இதி, சத்வாரிம் ஶோத்யாய:.

ப்ருஹத் ப்ரஹ்ம ஸம்ஹிதாயாம்:, க்ரியாபதே தஶ மாத்யாயே, ஆர்த்ரபிஷ்டேந வை தத்ர டங்கணம் (உப்பு) நிக்ஷிபேத்புத:, இதி ப்ரோக்தம். பராஶர ஸம்ஹிதாயாம், த்ருதீயாத்யாயே, "விஷ்ணர்வர்ப்பிதம் ரக்தவர்ணம்

ஹரித்ரா சூர்ணமுத்தமம் லக்ஷ்மீ நிவாஸ ஸித்த்யர்த்தம் தீபாகாரம் து ஸூக்ஷ்மகம்'', இத்யுக்தம்.

மஹாரத்ந கோஶே ப்ரஹ்ம நாரத ஸம்வாதே, சதுர்த்தாத்யாயே பஹுவிஸ்தரேணோக்தம். "விஷ்ண்வர்ப்பிதம் பத்மவர்ணம் ஹரித்ரா சூர்ண முத்தமம், லலாடே தாரயேந்நித்யம் விஷ்ணு ஸாயுஜ்ய காரணாத்''.

ஜயாக்ய ஸம்ஹிதாயாம், விஜயாக்ய ஸம்ஹிதா யாம், த்ரிம்சதத்யாயே ச ஸம்யதுக்தம். உபநிஷத்துக்களில், திருமண்ணை ஶுத்த வெளுப்பாக இருக்க வேணுமென்று சொல்லுகிறாப்போல், ஸ்ரீசூர்ணத் தை சிவப்பாய் இருக்க வேணுமென்று, ஸ்ரீவர்ணா, ஆதித்ய வர்ணா, அக்நிவர்ணா, அருணவர்ணா, பத்ம வர்ணா என்று பல உபநிஷத்துக்களில் சொன்னதற்கு விவரணமாக முன் காட்டின ஸம்ஹிதாதி வசநங் களைப் பார்த்தால் நல்லதாயும் சிவந்துமிருக்கிற மஞ்சளை பால்குந ஏகாதஶியில் பொடித்து, கஸ்தூரி, குங்குமப் பூ, ஸ்வர்ண சந்தநம், கர்ப்பூரம், துலஸீ முதலானதுகளைச் சேர்த்து புஷ்பவாஸனை களை ஊட்டி ஶ்ரிய: பதிக்கு ஸமர்ப்பித்து, அபாரமாக வேத மந்த்ரங்களால் பூஜித்து, பெரிய பாகவத கோஷ்டிக்கு ஸமர்ப்பித்துத் தாங்களும் தரிக்க வேணும். கஸ்தூரீ முதலானவைகளைச் சேர்க்க

சக்தி யில்லாத பக்ஷத்தில், டங்கணம் (உப்பு) படிகாரம் சேர்க்கலாமென்றும் சொல்லிற்று. புருஷர்கள் புருவத்திரள் நடுவில் தீபகாராமாயும், ஸுமங்கலி மூங்கில் இலையைப்போலவும், கன்னிகைப்பெண் பூநெளி விதையைப்போலவும், விதவை எள்ளைப் போலவும் தரிக்க வேண்டியதென்னும் விதியும் ஶிஷ்டாசாரமும் இருப்பதினாலே இதையநு ஸரித்து அனைவரும் இப்படியே அநுஷ்டித்து வருகிறார்கள். மேலும் ஊர்த்வபுண்ட்ரத்தை ப்ரணவ ரூபமாக த்யாநிக்கச் சொல்லியிருக்கிறது.

வாஸுதேவோபநிஷத்தில், அகாரத்திற்கு அர்த்தம் ஸ்ரீமந்நாராயணன், உகாரத்திற்கு அர்த்தம் லக்ஷ்மீ, மகாரத்திற்கு அர்த்தம் ஜீவாத்மாக்கள் என்னப்பட்டது.

ஸ்ரீமந்நாராயணனை இரண்டு ஹரிபாதாகாரமான ஊர்த்வரேகைகளிலும், ஸ்ரீமஹாலக்ஷ்மியை ஸ்ரீசூர்ணத்திலும், ஜீவாத்மாக்களுக்கெல்லாம் ப்ரதாநராயும் ஆசார்யராயுமிருக்கிறபடியாலும், அர்ச்சநா ப்ரகரணத்தில் பீடத்தில் ஆதிஶேஷனையும் ஆவாஹநம் பண்ணச்சொல்லி ஶாஸ்த்ர விதியிருப்பதாலும் "ராமாநுஜஸ்து ஆதிஶேஷ:" என்னும் நிகண்டு பலத்தாலே "ராமாநுஜ" னென்று ஆதிஶேஷனுக்கே முக்யமான பெயராகையாலும் ஸ்ரீராமாநுஜாசார்யரை

பீடத்திலும் அந்தந்த மந்த்ரங்களினாலே ஆவாஹநம் பண்ணித்யாநம் செய்ய வேண்டியது முக்யமாகையாலே, மகாரம் பீடம், அகாரம் இரண்டு ரேகைகள். உகாரம் நடுவிலிருக்கிற ஸ்ரீசூர்ணரேகையானபடியாலே ஊர்த்வபுண்ட்ரம் ப்ரணவ ஸ்வரூபமாகிறதென்று ஸர்வம் ஸமஞ்ஜஸம்.

ஸ்ரீசூர்ணவிஷயத்தில் ஆஸேதுஹிமாசலம், உடையவருடைய ஸ்ரீசூர்ணமென்றே சிவந்த ஸ்ரீசூர்ணத்திற்கு ப்ரஸித்த வ்யவஹாரத்தைப்பார்த்து நாஸ்திகாளுடையவும், குத்ருஷ்டிகளுடையவும் துருபதேசங்களை நிராகரித்து, ஸந்மார்காநுஷ்டா நத்தினாலே அநுபவித்து, எம்பெருமானாருடைய, அதாவது, "ஸ்ரீமத்ராமாநுஜ(பாஷ்யகார)ருடைய ஸித்தாந்த ப்ரவர்த்தகர்களாய் பஹுகாலம் வாழ்ந்து, *மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான்* என்று தேஹாவஸாநத்தில் மோக்ஷத்தையும் அடைந்து சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே" என்று நித்யமாக வாழ்வார்கள்.

இன்னமும் வேண்டிய ப்ரமாணங்களை புண்ட்ர நிர்ணய க்ரந்தத்திலும் பஞ்சஸம்ஸ்கார நிர்ணயித்திலும் பரக்கக்காணலாம்.

வாழி எதிராசன்! வாழி எதிராசன்! வாழி எதிராசன்!

புண்ட்ர நிர்ணய ஸங்க்ரஹ: ஸம்பூர்ண:

பரம க்ருபையையுடைய பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்த "**யதுகிரீ*ஶ* பஞ்சா*ஶ*த்**"தில்

## த்வயத்தின் வி*ஶே*ஷார்த்தம்

த்வயத்தில் பூர்வவாக்யத்திற்கு, "ஸ்ரீமானான நாராயணனுடைய திருவடிகளை உபாயமாகப் பற்றுகிறேன்" என்று அர்த்தமிருப்பதால், எல்லா திவ்ய தே*ஶ*ங்களிலும் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்களுடைய திருமார்பில் நாச்சியார் நித்யவாஸம் செய்து கொண்டு ஆ*ஶ்*ரிதர்களான சேதநர்களுடைய ஸகலாபராதங்களையும் பொறுப்பித்து, அவர்களுடைய அநிஷ்டங்களைப்போக்கி, அவர்களுக்கு வேண்டிய இஷ்டங்களைக் கொடுக்கும்படிக்கு புருஷகாரமாகிறபடியாலே, ஸகலதிவ்யதே*ஶ*த்து எம்பெருமான்கள் விஷயமாகிறது த்வயம் என்று ஒரு நிர்வாஹம்.

இந்த த்வயமாகிற ப்ரமாணத்தையும் பற்றி யுக்தி அநுபவங்களையும் நன்றாகப்பார்த்தால், இது திருநாராயணபுரத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் விஷயமாகவே சொல்ல வேணுமென்று ஏற்படுகிறது.

ஏனென்றால் " சரணௌ *ஶ*ரணம் ப்ரபத்யே" என்று திருவடிகளை உபாயமாகப்பற்றுகிறேன் என்பதினால், திருவடிகள் உபாயமாக ஏற்படுகின்றன. எது உபாயமோ அவ்விடத்தில் புருஷகாரம் வேண்டியது அவசியமாகையால் 'ஸ்ரீமத்' என்னும் பதத்திற்கு அர்த்தமாகிய பிராட்டியினுடைய நித்ய ஸம்பந்தத்தைத்

திருவடிகளுக்குச்சொல்ல வேண்டியது ந்யாய ப்ராப்தம். மேலும் ஸகலதிவ்யதேஶங்களிலும் புருஷகார பூதையான பிராட்டியினுடைய நித்ய ஸம்பந்தம் நாராயணனிடத்தில் இருக்கிறதே தவிர நமக்கு உபாயமான திருவடிகளில் இல்லை. திருமார்பிலிருக்கும் லக்ஷ்மி, உபாயமான திருவடிகள் வரையில் வந்து புருஷகாரம் பண்ணுவதில் உண்டாகும் விலம்பத்தை ஸஹிக்கமாட்டாத குணங்கள் உடையவளாதலால், இப்படிப்பட்ட அர்த்த விஶேஷத்தை அநுபவத்தில் காட்டுவதற்காகவே திருநாராயணபுரத்தில், புருஷ காரத்தில் தனக்குண்டான த்வராதிஶயத்தைக் காட்டி, அத்தாலே வரனான ஈஶ்வரனை ஸந்தோஷிப்பிக்கிற படியால், “வர நந்திநி” என்னும் அஸாதாரணமான திரு நாமத்தையுடையவளாய்க் கொண்டு திருநாரணன் தாள்களில் நித்யமாய் எழுந்தருளியிருப்பது ஸர்வஜநங்களுக்கும் ப்ரத்யக்ஷ அநுபவ ஸித்தம்.

ஆகையால் ஶ்ரீமத் ஶப்தத்தை உபாயபூதமான ஶரண ஶப்தத்தில் அந்வயித்துச்சொல்வது மிகவும் ஸ்வரஸம். இந்த அர்த்த விஶேஷத்தை பரம க்ருபையையுடைய பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்த “யதுகிரிஶ பஞ்சாஶத்” என்கிற ஸ்தோத்ரத்தில் காணலாம்.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்

ஜீயர் திருவடிகளே சரணம்



இந்நூலின் பதிப்பாசிரியரின் பிதாமஹரும், நூலின் ஆசிரியருமான
**ஸ்ரீமான் உ.வே. திருநீர்மலை கோமடம் க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி.**
ஸ்ரீபெரும்பூதூரில் கோமடம் ஸ்வாமியென்றே ப்ரஸித்தராய் வாழ்ந்தவர்.